
நன்றி - நூலகத்திட்டம்

සරිනිහර්
SARINIHAR
சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி
இதழ் 27 1-15 ஒகஸ்ட் 1993



கோடரிக்கு மரக்காமபாம்; கொல்லருக்கு வெட்டிரும்பாம்
வேடரது வில்லுக்கோ தோலே நாணாம் - ஆடரங்கே
எம்மவர்க்கு யாரென்றேன் ஏங்குகிறாய்; கனேசர்
நம்மவர் அல்லரோ நவில்.

ஈழமோகம்

# வட-கிழக்குப் பிரச்சினைக்கு

# யுத்தம் ஒன்றே தீர்வு !

## ஜாதிக சிந்தனையாளர் பேச்சு

"இராணுவத்தினருக்காய் போதிமரத்தடியில் தியானிப்பது அர்த்தமற்றது. மக்கள் அனைவரும் இராணுவத்தின் கீழ் அணிதிரள வேண்டும்; அவர்களுக்கு எவ்விதத் தடங்கலும் இன்றி யுத்தத்தை நடாத்துவதற்குரிய தேசியத் தலைமை வழங்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் நிலவுவது பயங்கரவாதிகளின் பிரச்சினையே. அது யுத்தத்தால் மட்டுமே தீர்க்கப்படக் கூடியது. வடக்கு கிழக்கில் இன்று நடக்கும் யுத்தம் தமிழ் இனவாதிகளால் உருவாக்கப்பட்டதே. அவர்களது நோக்கம் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல முழு இலங்கையிலும் தமிழ் இராஜ்யம் அமைப்பதே".

இவ்வாறு ஜுலை 15ம் திகதி கொழும்பு பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் ஜாதிக சிந்தனைய (தேசிய சிந்தனை) அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வு என்ன? என்ற தலைப்பிலான கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இக் கூட்டத்தில் உரையாற்றிய ஜாதிக சிந்தனய அமைப்பின் பிதாமகர்களான கலாநிதி குணதாச அமரசேகர, கலாநிதி நளின் டி சில்வா, எஸ்.எல்.குணசேகரா, நாலந்த பிக்கு ஆகியோர் தமது உரைகளின் போது அரசின் மீதும், எதிர்க் கட்சிகள் மீதும் பலத்த கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்

வடக்கு கிழக்குப் பிரச்சினை தொடர்பான தீர்வு முயற்சிகளில் ஈடுபடுவதைக் கண்டனம் செய்த திரு. குணதாச அமரசேகர மண்டபம் நிறைந்து வழிந்த கூட்டத்தின் ஆரவாரமிக்க கரகோஷத்தின் மத்தியில் 'என்னிடம் ஆயுதம் இருக்குமானால் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு கூறுவோரை முதலில் சுட்டுத் தள்ளுவேன்' என்று தெரிவித்தார்.

## "பேசவேண்டும் என்பவர்களை என்னிடம் ஒரு துப்பாக்கி இருக்குமானால் சுட்டுக் கொல்வேன்"

கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் பயங்கரவாதத்தை முறியடிப்பதே எமது நோக்கமாக இருக்க வேண்டும் ஏனெனில் புலிகள் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகள். யுத்தமே தீர்வு. இந்த யுத்தம் சரியாக செய்யப்பட வேண்டும்.


இராணுவத்திற்காக போதிமரத்தடியில் தியானிப்பது அர்த்தமற்றது. மக்கள் அனைவரும் இராணுவத்திற்கு பின்னே அணிதிரண்டு செல்ல வேண்டும் அப்பொழுதுதான் பயங்கரவாதத்தை முறியடிக்கலாம். வெளிநாடுகளில் இருந்தும் இதற்கு உதவி பெறலாம். எங்கள் இராணுவத்தால் இதனை சாதிக்க முடியும் என்கின்ற நம்பிக்கை எனக்குண்டு.

மங்கள முனசிங்க ஒரு பூனை. அந்தப் பூனையின் அண்ணன் தான் புலி. புலிகளின் யோசனையைக் கேட்டுத்தான் புதிய திட்டங்களைக் கூறுகின்றார்கள். எங்களைப் பொறுத்தவரை எந்தத் திட்டங்களையும் நாம் ஏற்பதாக இல்லை. பிரிந்தால் என்ன! வாக்கெடுப்பு நடாத்தி யார் வென்றால் என்ன ! தோற்றால் என்ன ! நாம் இதை எதிர்ப்போம்.

சிலர் பிரபாகரனுடன் பேச்சு வார்த்தை செய்யக் கோருகின்றார்கள். இராணுவம் பிரபாகரனை இவ்வளவு தூரம் விட்டு வைத்திருப்பதே புதுமையானது. எனக்கு ஆயுதம் கிடைக்குமாயின் பேச்சு வார்த்தை செய்யக் கோருபவர்களையே முதலில் சுட்டுத் தள்ளுவேன் என்றார்.

இவரை அடுத்து வடக்கு கிழக்கு பிரச்சினை - வரலாறும் தீர்வும் என்ற தலைப்பில் பேசிய கலாநிதி நளின் டி சில்வா தமது உரையின் போது,

1956ம் ஆண்டு நடைபெற்றது தமிழ் மக்களுக்கு எதிராக செய்யப்பட்டது அல்ல. இந்த நாட்டில்



நளின் டி சில்வா.

இருந்த ஏகாதிபத்தியவாதிகளின் கைக்கூலிகள், இதனை தமிழ் இனத்திற்கு எதிரானது எனப் பிரச்சாரப்படுத்தினார்கள். இதனுடன் தமிழ் இனவாதக் குழுக்களும் சேர்ந்து, 1956 இல் நடைபெற இருந்த சிங்கள புனரமைப்பை, அன்று இல்லாதிருந்த உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொள்ள முயற்சித்த நடவடிக்கையை, தமிழ் இன விரோத நடவடிக்கையாகப் பிரச்சாரப்படுத்தினார்கள.

வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் எனக் கூறப்பட்டால், பின் அதில் வரையறுக்கப்படுகின்ற பிரதேசம், சிங்கள, முஸ்லீம் மக்களின் தாயகம் அல்ல. அப்படியானால் இது, சிங்கள முஸ்லீம் மக்கள் மீதான ஒடுக்குமுறை. அவர்களுக்குச் செய்யும் அநீதி.

## சிங்களக் குடியேற்றங்களல்ல மீளக் குடியமர்த்தலே

குறிப்பாக கிழக்குப் பிரதேசங்களில், தமிழ் மக்கள் சிறிது,சிறிதாகக் குடியேறினார்கள். 20ஆம் ஆண்டளவில், இப்பகுதிகளில், இவர்கள் பெருபான்மையானவர்கள். ஏகாதிபத்தியத்தின் நோக்கமும், சிங்களவர்களை வெளியேற்றி, தமிழர்களைக் குடியேற்றுவது தான்.

சிங்களவர்கள் வாழ்ந்த இடத்தில் தமிழர்களைக் குடியேற்றினார்கள். ஆனால் சிங்களவர்கள் மீண்டும் சென்று குடியேறுவது மறுக்கப்படுகின்றது. தமிழர்கள் கிழக்கில் வாழ்வதற்கு விரோதமாக இதைக் கூறவில்லை. ஆனால் சிங்கள மக்கள் மீளக் குடியமர்ந்த பின் விரோதம் காண்பிக்கப்படுகின்றது. உலக ஏகாதிபத்தியவாதிகளும், தமிழ் இனவாதிகளும் என்ன கூறுகிறார்கள்? தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் புதிய சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துங்கள் என்று. ஆனால் இது புதிய குடியேற்றமேயல்ல, மீளக் குடியமர்தலே. சிங்களவர்களுக்கு மீளக் குடியமர்தல் உரிமையுண்டு. இந்த உரிமையை மறுப்பவர்கள் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளே!

தேச செஞ்சிலுவைச் சங்கம் தன் பொறுப்பில் கூட்டிச் சென்ற பொலிஸாரின் பெற்றோருக்கு என்ன நடந்தது? எமக்குச் சொல்கிறார்கள், பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் என்பதால் அங்கு இருக்கின்றார்களாம். ஆனால் உண்மை அதுவல்ல. அவர்களும் புலிகளால் சிறைபிடிக்கப் பட்டுள்ளனர். கைக்கூலிகளான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் செய்த மிகப் பெரிய தவறுகளில் இதுவும் ஒன்று.

அடுத்தவர்கள்தான், நாம் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டியவர்களும், கவனமாக இருக்க வேண்டியவர்களுமான மிஷனரி சக்திகள். இவர்கள் தோலுரித்துக் காட்டப்பட வேண்டியவர்கள். இச் சக்திகளுக்கு இலங்கையைக் கீழ்ப் படிய வைக்க முடியவில்லை. ஒரு கையில் பைபிளையும், மறு கையில் 'பைனைட்' டையும் கொண்டு வந்தும் முடியாமல் போய் விட்டது. சமயப் பிரச்சாரம் மூலம் செய்ய முடியாமல் போக, அவர்கள் கண்ட புதிய வழிதான் ஈழம் வாதம், தமிழ் இனப் பயங்கரவாதம் என்பது எனவும் குறிப்பிட்டார்.

## வடக்கு-கிழக்குப் பிரச்சினை என்ற ஒன்றில்லை

அடுத்துப் பேசிய நாலக்க பிக்கு அவர்கள், தமிழர் பிரச்சினை என்பது, வரலாற்றில் மிக நீண்ட காலமாகவே உள்ளது. தமிழ் நாட்டில் இருந்து அடிக்கடி, நம் தாய் நாட்டின் மீது ஆக்கிரமிப்பு நடைபெற்றது. இது தான் தமிழ்ப் பிரச்சினை: வடக்கு கிழக்கில் ஈழம் வாதிகளால் தமிழ் இனவாதிகளால், பயங்கரவாதிகளால் உருவாக்கப்பட்ட யுத்தமே இப்பொழுது நடைபெறுவது. இப்படி, இவர்களால் உருவாக்கப்பட்ட யுத்தத்திற்கு மூல காரணம், வடக்கு- கிழக்கில் மட்டுமல்ல, முழு இலங்கையினாலுமே 'தமிழ் இராச்சியம்' அமைப்பது என்கிற நோக்கமாகும்.

புலிகளின் கைக்கூலிகளான சர்வ

83 படுகொலைகள் முடிந்து பத்து வருடங்களின் பின்னரும், இந்த யுத்தத்தின் மூலம் நாடு இவ்வளவு அழிவுகளை எதிர் நோக்கிய பின்னரும், பாதுகாப்புக்கான செலவினம் 83இல் ரூபா 1870 மில்லியனிலிருந்து 93இல் 18000 மில்லியன் ரூபாவாக அதிகரித்த பின்னரும், தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் பற்றிச் சிங்கள மக்களின் எண்ணப்பாடு இப்படித்தான் வளர்க்கப்பட்டு வருகிறது என்பதை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகிறது இந்த உரைகள். இவை இனவாதத்தின் பலமான போக்குகள். இனவாதம் பலவீனப்பட்டு விடவில்லை என்பதற்கு இது ஒரு சிறு உரைகல்லோ?

நன்றி - நூலகத்திட்டம்



## நாங்கள் யாழ்ப்பாணத்தவர் அல்லவோ

யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளால் 24 மணித்தியாலங்களுக்குள் ஓடோட விரட்டப்பட்ட ஒரு 50 வயதான முஸ்லிம் பெண்மணி எனது வீட்டிற்கு வந்தார்.

பக்கத்து வீட்டுக்கு புதிதாக குடிவந்திருக்கும் ஆசிரியரின் அம்மாவாம். எமது வீட்டில் யாழ்ப்பாண தமிழ் கதைத்துக் கேட்கவே, தமிழில் கதைக்க அடக்கமுடியாத ஆசையுடன் என்வீட்டுக்கு வந்ததாக கூறினார் அவர்.

ஆறு பிள்ளைகளின் தாயான அவர், பிறந்தது, திருமணம் செய்தது, பிள்ளைகளை படிப்பித்தது, பெண்பிள்ளைகட்கு வீடுகட்டி கொடுத்தது, கல்யாணம் செய்து வைத்தது எல்லாமே யாழ்ப்பாணத்தில்.

கணவர் இறந்தபின், கண்டியில் திருமணம் செய்த ஒரு மகளை தவிர யாழ்ப்பாணத்திலேயே இருந்த ஐந்து பிள்ளைகளுடனும் மாறிமாறி இருந்து சந்தோசமாக 'சீவிச்சனாங்கள்' என்கிறார் அவர்.

'யாழ்ப்பாணத்தின் சுகம் துக்கம் எல்லாவற்றிலும் இரத்தமும் சதையுமாக பங்கு பற்றியவங்கள் நாங்கள்,

'திடீரென்று 5000 காசும் 5பவுண் நகையும் மட்டும் எடுத்துக் கொண்டு ஓடிப்போகச் சொன்னார்கள்,

'நாம் காசு எதையும் சேர்த்து வைக்கவில்லை'

'பொருட்களாக தானே சேர்த்துவைத்தோம்! வீடுவாசல், வீட்டுத் தளபாடங்கள் என்று....'

அவசரத்தில் கையும் ஓடாமல் காலும் ஓடாமல் எதை எடுக்க எதைவிட என்று தெரியாம்ல தவித்தோம்.
எங்களுக்கு யாழ்ப்பாணத்துக்கு வெளியே யாரும் இல்லை.
'ஒரு மகள் கண்டியில் இருக்கிறாள். ஆனால் அவளும் கணவரின் உத்தியோகம் காரணமாக கண்டிக்கு போறவளே...'

'புறப்பட முன்பு நான் ஆசையாக செய்து வைத்திருந்த ஒரு சிறிய பென்ரன் - எனது பேரப்பிள்ளைக்கு போடவென செய்தது- எடுத்து சேலைத்தலைப்பில் முடிந்து கொண்டேன். ஆனால்,

'அந்தப்பெட்டையள் என்ரை சீலையை உரிஞ்சே சோதிச்சாளவை' என்று பெண்புலிகளைப் பற்றிக் கூறினார். கூறும் போது




கண்களால் நீர் வடிந்தது. வெட்கம் அந்தவயதிலும் அவவை நடுங்க வைத்தது.
'பென்ரனை பிடுங்கிய பின் விசாரித்தார்கள்'
'யாழ்ப்பாணத்திலை சுரண்டின காசிலை செய்ததுதானே? அது தானே 5 பவுண் எடுக்கச் சொன்னம் போதாதா?'
நாங்கள் யார்? நாங்க மட்டும் யாழ்ப்பாணத்தார் இல்லையா?

என்னை -யாழ்ப்பாணத்தை விட வேறை எதுவுமே தெரியாத என்னை- இப்பிடிக் கேக்கினமே.....

இஞ்சை வந்து ஒரு சொல்லு சிங்களமும் தெரியாமல் இந்த வயதிலே....

நெஞ்சுமுட்டியது; எனக்கும்தான்.'

## டொக்டர் ராஜசுந்தரம்

டொக்டர் என்று பொதுவாகவும் பரவலாகவும் அறியப்பட்ட ராஜசுந்தரம் கொல்லப்பட்டு 10 ஆண்டுகள் முடிந்து விட்டன.

வவுனியாவிலிருந்து, 'வெடிவைத்த கல்லை'நோக்கி அவரது ஜீப்பை ஓட்டியபடி அவர் எனக்கு சொல்லிக் கொண்டு வந்த வார்த்தைகள் இப்போதும் காதுகளில் ஒலிக்கின்றன.காந்தீயத்தின் பண்ணைகளில் ஒன்றான'நாவலர் பண்ணைக்கு'ப் போகையில் அவர் இப்படிச் சொன்னார்..

''அவர்கள் திட்டமிட்டு வடக்குகிழக்கை பிரிக்க நடவடிக்கை எடுக்கிறார்கள். திருகோணமலை, வவுனியா ஊடாக மன்னார் வரை சிங்கள குடியேற்றங்களை உருவாக்கி பூகோள ரீதியில் வட-கிழக்கைப் பிரிக்க முயல்கிறார்கள். அதற்குப் பதிலடியாக நாமும் தமிழ்க் குடியேற்றங்களை ஆரம்பிக்க வேண்டும்.கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளை குடியேற்றுவது, அவர்களுக்கு விவசாய நிலங்களை வழங்குவது என்பன மூலமாக நாமும் முல்லைத்தீவு - திருகோணமலை இடையை பலமான தமிழ்ப்பிரதேசமாக ஆக்க வேண்டும்....''
பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் இருந்த அவரது கனவுகள் சிதைந்து விட்டன.

வடக்கு கிழக்கை இணைக்க அவர் மலையக மக்களை குடியேற்றும் முயற்சியில் ஈடுபட்ட போதும் வடக்கு விவசாய முறைக்கு பரிச்சயமில்லாத அவர்களால் அந்த மண்ணுடன் எதிர்பார்த்த விதத்தில் ஒன்றி விட முடியவில்லை.
இதைவிட மோசம் அந்த மக்களை ஏமாற்றி அவர்களின் கூலி உழைப்பை சுரண்ட அங்கிருந்தவர்கள் முயன்றது.
ஒரு துண்டு பாணுக்காக ஒரு நாள் உழைப்பை அங்கு அவர்கள் விற்றதையும் நா்ன் கண்டேன்.
டொக்டரின் முயற்சி வெற்றி பெறும் என்று நான் கருதவில்லை. ஆனால் அவர் அயராது உழைத்தார்.
அன்று 'அரசியல் அரங்கின்' விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்களாக இருந்த கூட்டணியினரை விட அவர் தீவிரமாகவும் பொறுப்புணர்வுடனும் உழைத்தார்.
இன்று அவரும் இல்லை; அவரது திட்டமும் இல்லை.
ஆனால் அ[illegible]யந்தது மட்டும் நடந்து கொண்டே இருக்கிறது!.

# எல்லைத் தமிழினி

## 1983 ஆடியும் 1993 ஆடியும்

1983 ஆடிக் கலவரத்தின் ஞாபகம் வருகிறது.
அப்போது கொழும்பில் கலவரத்துள் அகப்பட்டு தப்பிப் பிழைத்து அகதி முகாம்களுக்குள் தஞ்சமடைந்தவர்களுள் நானும் ஒருவன். எந்த விதமான அடிப்படை வசதிகளும் அற்ற இரத்மலானை முகாமில் கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேர் வரை இருந்ததாக ஞாபகம்.
தண்ணீருக்கு இருந்தது ஒரேயொரு குழாய்.
காலைச்சாப்பாட்டின் பின் தண்ணீர் குடிப்பதற்காக கியூவில் நின்றால் தண்ணீர் குடித்து முடியும் போது மத்தியான சாப்பாட்டு வேளை வந்துவிடும்.
மலசலகூடங்களோ கவனிப்போ,பாவனையாளர்களின் சிரத்தையோ இன்றிப் பயன்படுத்தப்பட்டதால் அண்டமுடியாதளவுக்கு மோசமாக இருந்தன.
கிட்டப் போனால் குமட்டிக் கொண்டுவந்தது.
பலருக்கு வாந்திபேதிகூட தொடங்கியிருந்தது.
காயப்பட்டவர்கள், நிறைமாதக் கர்ப்பிணிகள் என்று கிட்டத்தட்ட நூறுபேர்வரை இருந்தார்கள்.
கப்பலில் எங்களை ஊருக்கு அனுப்பப் போகிறார்கள் என்று சொன்னபோது பல சுவையான சம்பவங்கள் நடந்தன.
ஏற்கனவே எல்லாம் இழந்து உடுத்த உடுப்போடு வந்திருந்த அகதிகளிடையே 'எல்லோரும் அகதிகள்' என்ற உணர்வு அவ்வளவு பெரிதாக இருந்ததை நான் காணவில்லை. சாதி, இந்தியத் தமிழர்,இலங்கைத் தமிழர்,பதவி போன்ற காரணங்களால் வெளியே பிளவுபட்டிருந்த அவர்கள் உள்ளேயும் அப்படியே தான் இருந்தார்கள் என்பதை கவனித்திருந்தேன்.
ஒரு வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பத்துப்பேர் தம்மைச் சுற்றி ஒரு கோடுபோட்டு அதற்குள் யாரும் வரவேண்டாம் என்று கூறிவிட்டு அமர்ந்திருந்தார்கள். வேறு குழந்தைகளுடன் தமது குழந்தைகளை விளையாட அனுமதிக்காதது மட்டுமல்ல,விளையாட அழைத்த பிற குழந்தைகளையும் விரட்டினார்கள்.
அகதியானாலும் கூட இவர்கள் மாறப்போவதில்லை என்று எனக்குப் புரிந்தது.
ஆனால் கப்பலில் ஆட்களை அனுப்புவதாக அறிவித்ததும் முண்டியடித்துக் கொண்டு அகதிமுகாம் அலுவலகத்தை எல்லோரும் முற்றுகையிட்டார்கள். காயப்பட்டவர்கள், கர்ப்பிணிகள் பிறநோயாளிகள்,பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரை முதல் அனுப்புவது என்ற தீர்மானத்தை யாரும் கணக்கெடுக்கவில்லை.

தமது உத்தியோக செல்வாக்கு, பணபலம் என்பவற்றை பயன்படுத்தி தாம் முதலில் கப்பலில் இடம் பிடிக்க முயன்றார்கள். எல்லா உடமைகளும் இழந்து அகதிக் கூட்டமாகிய ஒரு குழுவுக்குள்,வெலிக்கடையில் ஐம்பத்துமூவர் கொல்லப்பட்டது போல் இந்த முகாமில் உள்ளவர்களும் கொல்லப்படலாம் என்ற அச்சம் பரவலாக இருந்த நிலையில் கூட தமது சுயநலத்தையும், ஒருவரை ஒருவர் விழுங்கும் குணத்தையும் அவர்களால் விட்டுவிட முடியவில்லை.

தாம் இருக்கும் காலம்,இடம்,சூழல் என்பவற்றினை மறந்துவிட்டு முரட்டுக் குணத்துடன் இயங்கும் ஒரு இனமோ இது என்று அப்போது நினைத்தேன்;சுயநலமும் எதற்கும் குறுக்கு வழியை நாடும் மனோபலமும் கொண்டவர்களா தமிழர்கள் என்று அப்போது யோசித்தேன்;மரணத்தால் கூட வெல்லமுடியாத வெறி கொண்டவர்களா இவர்கள் என்று....
இப்போது 1993 ஆடி முடிகையில்...
அவையெல்லாம் உண்மைதான் என்பதை கண்ணாரக் கண்டு களித்துப் போயிருக்கிறேன்!.

## இன்று வசந்தம் தான்...

சுபாஸ் முகோபாத்யாய

மலர்கள் இருக்கின்றனவோ இல்லையோ
இன்று வசந்தம் தான்
நடைபாதையிலுள்ள கற்களில்
தனது வேர்களை ஊன்றியவாறு
ஒரு உலர்ந்த மரம்
அதன் பிளந்த பாகத்தினூடாக
பசுமையான இலைகளைத் துளிரவிட்டுப்
புன்னகைக்கிறது

மலர்கள் இருக்கின்றனவோ இல்லையோ
இன்று வசந்தம் தான்
ஒளியின்மீது கறுப்புக் கண்பட்டைகளைப்
பொருத்திப் பின்னர் அவற்றைக் கழற்றிவிட்டு
மனிதர்களைச் சாவின் மடியில் கிடத்திப்
பின்னர் அவர்களைக் கைகளில் ஏந்திச்
சாலை வழியே சென்ற அந்த நாட்கள்
-திரும்பி வராதிருக்கட்டும் அந்த நாட்கள்

மஞ்சளைப் பூசிவிடும் அந்தப் பிற்பகல்
வேளைகளில்
ஒரு காசுக்கோ இரண்டு காசுக்கோ
குயில் போலக் கூவிக் காட்டிச் சென்ற
அந்த விகடக்காரச் சிறுவன் -
அவனைப் பறித்துச் சென்றுவிட்டன அந்த நாட்கள்

மேலே உள்ள வானம்
சிவப்புமையில் அச்சிடப்பட்ட
ஒரு மஞ்சள் நிறக் கடிதம் போலக் காட்சி தருகிறது
அந்தச் சந்துமுனையில் வசிக்கும்
அழகற்ற, கருநிற,மணமாகாத பெண்ணோ
சோகமான இந்த விஷயங்களையெல்லாம்
நினைத்துப் பார்க்கிறாள்
வாசல் கதவுக் கம்பிகளில்
தன் மார்பகத்தைப் பதித்தவாறு.



அந்தக் கணத்தில் தான்
ஒரு வெட்கம் கெட்ட பட்டாம்பூச்சி-
ஓ,அந்தப் பாழாய்ப்போன பட்டாம்பூச்சி
குருட்டாம் போக்கில் அவள்மீது அமர்கிறது

அதன் முகத்தில் அறைந்தாற் போல்
அவள் கதவைச் சாத்துகிறாள்.
ஆனால் அந்த முடிச்சு விழுந்த மரமோ
இருட்டில் தனக்குள்ளேயே சிரித்துக்
கொண்டிருக்கிறது.

ஆங்கிலம் வழித் தமிழில்: வ.கீதா, எஸ்.வி. ராஜதுரை

நன்றி - நூலகத்திட்டம்




# இலங்கை: விதவைகளின் அரசியற் பிரவேசம்

## -சில கேள்விகள்

-குமாரி ஜெயவர்தன-

பெரும்பாலான சமூகங்களில் விதவைகள் துரதிர்ஷ்டம் வாய்ந்தவர்களாகவும், ஏழைகளாகவும் கருதப்பட்டனர். ஆணாதிக்க சமூகங்களில் அதிமதிப்பு பொருந்தியவரான ஆணை - கணவனை இழந்ததால் அவர்கள் இரக்கத்திற்குரியவர்களாக நோக்கப்படுகின்றனர்.
கண்டிப்பற்ற கலாசாரங்களில் உதவப்பட வேண்டியவர்களாகவும் கடினமான கலாசார நடைமுறைகளையுடைய சமூகங்களில் விதவைகளே தமது கணவரது மரணத்திற்குக் காரணர்களாகவும் கருதப்படுகின்றனர். சில சமயங்களில் விதவைகளில் கருணையும் காட்டப்படுகிறது. விவிலிய கதைகளின் படி யேசுகிறிஸ்து, செல்வர்கள் அளித்த பெருமளவு பரிசுகளை விட ஒரு விதவை வழங்கிய இரு நாணயங்களையே பெருமதிப்பு வாய்ந்ததாகக் கருதினார். ஆனால் பொதுவாகவே விதவைகள் நல்முறையில் நடத்தப்படுவதில்லை. தென்னாசியாவில் விதவைகள் குறித்து வழங்கும் பழமொழிகளும் மரபுத் தொடர்களும் அவர்களை அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளன.
எனினும், ஒரு விதவை சுதந்திரமான பெண்ணாகவும் இருக்கமுடியும். அவளது கைம்மையே அவளை கணவனது ஆதிக்கத்திலிருந்தும், வீட்டு வேலைகளிலிருந்தும் விடுவிக்கும். ஒரு ஆணின் நிழலில் வருடக்கணக்காக வாழ்ந்த நிலையிலிருந்து விடுபட்டு, தனது சொந்த விருப்பங்களுக்கு இசைய நடக்கமுடியும். 'மகிழ்ச்சிகரமான' விதவையாகவோ, உலகத்தலைவர்களில் ஒருவராகவோ தனது வாழ்கையைக் கழிப்பதா எனத் தேர்வு செய்யும் சுதந்திரமும் அவளுக்குக் கிட்டுகிறது. அல்லது அவள் அரசியலில் ஈடுபடவோ, தேர்தலில் போட்டியிடவோ கட்சித் தலைவர்களாற் தூண்டப்படலாம்.
விதவைகள் மறுமணத்திற்கு ஆதரவு வழங்காத, சிறுபிள்ளை விதவைகள் காணப்படுகிற, இன்னும் கூட 'சதி' வழக்கம் நிலவுகிற பிரதேசங்களை உள்ளடக்கிய தென்னாசியப் பிராந்தியத்தில் வியக்கத்தக்க வகையில், விதவைகளின் அரசியல் பங்குபற்றுதல் உலகிலேயே முதலிடம் பெறுவதைக் காணலாம். இலங்கையில் குறிப்பாக சமீபகால அரசியல் படுகொலைக்குப் பின்னர், விதவைத்துவமே அரசியலில் நுழைவதற்கு ஒரு நிச்சயமான வழியாகத் தென்படுகிறது. ஆனால் அதே சமயம் விதவைகள் பற்றிய தென்னாசிய விழுமியங்கள் விதவைகளுக்கு விரோதமானவையாகவே உள்ளன. கணவனை இழந்த பெண் குடும்பத்திற்கு நாசத்தை விளைவித்தவளாக மாத்திரமின்றி தான் உயிர் வாழ்வதற்குரிய காரணத்தையும் இழந்தவளாக கருதப்படுகிறாள்.
பாரம்பரிய இந்து விதிமுறைகளின் படி ஒரு விதவை தனது அழகு, பாலியல் ஆகியவற்றுக்குரிய சகல அடையாளங்களையும் துறந்து விட வேண்டும்; கூந்தல் கலைந்து ஆடை அலங்காரங்களைத் துறப்பது மாத்திரமல்ல, கடினமான வேலைகளிலும் சமயப் பணிகளிலும் ஈடுபட வேண்டும் எனக் கருதப்படுகிறது. மறுமணமோ நினைக்கவும் தகுந்ததல்ல. எனினும் தற்காலத்தில் இத்தகைய 'கடும்பிடி' நிலைமை இல்லாவிடினும், தென்னாசிய விதவை பொதுவாக ஒரு துறவுசார் வாழ்வையே மேற்கொள்கிறாள். திருமணங்கள், வேறு புனிதமான நிகழ்ச்சிகளின் போது அவளது பிரசன்னம் தவிர்க்கப்படுகிறது. அபசகுனத்தின் அடையாளமாகவும் கொள்ளப்படுகிறாள். தூற்றுதலுக்கு இலக்காவதுடன் கணவனின் குடும்பத்தவரால் 'வெளியாராக' நோக்கப்பட்டு, சொத்துரிமையையும் இழக்கிறாள். இத்தகைய ஒரு பின்னணியில்
'புறக்கணிக்கப்பட்ட விதவைகள்' அரசுகளின் தலைவியராக ஆவது தென்னாசிய அரசியல் அவதானிகளை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியுள்ளது. முன்பு புன்சிரிப்புடன் தேநீர் பரிமாறிக் கொண்டிருந்த மனைவியர் அரசியல்வாதிகளின் மரணத்துடன் குறிப்பாகக் கொலையுடன் திடீரென அரசியல் அரங்கின் மையத்துக்கு வந்து விடுகின்றனர்.



தென்னாசியாவில், சமீப தசாப்தங்களில் அரசியலில் விதவைகளின் பிரவேசம் குறிப்பிடத்தக்கது. இது பற்றிச் சிலர் முணு முணுத்தாலும் அவை பெரிதாகக் கேட்கவில்லை. மிகவும் பிரபலமான விதவையாகிய இந்திரா காந்தி தமது தந்தை வழியாக அரசியல் உரிமையைப் பெற்றுக் கொண்டவர். விதவைகள் அரசியலில் ஈடுபட வேறு எந்த தகுதிப்பாடும் தேவையில்லை போன்றே தென்படுகிறது. காங்கிரஸ் தலைவர்களால் அரசியலில் ஈடுபடுமாறு சோனியா காந்தி வற்புறுத்தப்பட்டமையை நோக்கும் போது வெளிநாட்டவர் கூட விதவையாக இருப்பின் அரசியலில் பங்குபற்றுதலுக்குத் தகுதியானவர் போல உள்ளது. பங்களாதேஷிலும் பிரபலமான அரசியல் வாதிகளின் புதல்வியரும் விதவையரும் தேர்தலில் போட்டியிட்டுள்ளனர். அங்கு இப்போது, விதவையான பேகம் காலிதா ஷியா பிரதம மந்திரியாகவுள்ளார். கணவர் உயிருடன் இருக்கும் போது தேசிய மட்டத்தில் எள்ளளவும் அறியப்படாதிருந்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 1960ம் ஆண்டு உலகின் முதல் பெண் பிரதமரானார். 70-77 இற்கு இடைப்பட்ட காலத்தில் பதவியில் இருந்தது மாத்திரமன்றி தற்போதும் எதிர்க்கட்சித் தலைவராக உள்ளார்.
விதவைகளின் வல்லமை கடந்த காலத்துக்குரியது மாத்திரமன்று. குறிப்பாக தற்போது இலங்கையில் கட்சித் தலைமைக்கும், உயர் பதவிக்கும் மூன்று பெண்கள்- விதவைகள்- போட்டியிடுகின்றனர். இவர்களுள் சந்திரிகா குமாரணதுங்கவே தற்போது மிகுந்த வெற்றி வாய்ந்தவராக காணப்படுகிறார். எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, சிறிமா ஆகியோரின் தந்தை வழி, தாய் வழி உரித்துடையவராக மாத்திரமன்றி பிரபல திரைப்பட நடிகராகவும் இலங்கை மக்கள் கட்சியின் தலைவராகவும் விளங்கிய, 1988ம் ஆண்டு கொலையுண்ட விஜய குமாரணதுங்காவின் மனைவி என்ற அடையாளமும் அவருக்கு உள்ளது. மே மாத மாகாண சபைத் தேர்தலில் ஏனையோரிலும் பார்க்க பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற அபேட்சகராகவும் தற்போது மேல் மாகாண சபையின் முதலமைச்சராகவும் அவர் விளங்குகிறார்.



ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத் முதலி, ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா ஆகியோரின் சமீபத்திய அரசியற் கொலைகள் அவர்களது மனைவியரை அரசியலுக்குள் தள்ளி விட்டுள்ளன. மரணச் சடங்கின் போது சோகவயப்பட்டவராகக் காணப்பட்ட ஹேமா பிரேமதாசா பாரம்பரியத்தை மீறி தமது குடும்பத்தின் சார்பில் நன்றி தெரிவித்தபோது சகலரையும் ஆச்சரியப்படுத்தினார். அரசியல் தொனி கொண்ட அவரது சொற்பொழிவு பல்லாயிரக்கணக்கான தொலைக் காட்சிப் பார்வையாளர்களை வியப்பிலாழ்த்தியது. அரசியல்வாதியாக உருமாற்றம் பெற்ற கண்ணீர் சிந்திய விதவை தனது சொந்த நிலைமையுடன் அரசியலை நேர்த்தியாக இணைத்தார். ''எனதும் எனது பிள்ளைகளதும் எதிர்காலத்தை மக்களிடம் ஒப்படைக்கிறேன்'' எனக் கூறி அழுத ஹேமா ''நீங்கள் ஆதரவற்றவராகிவிட்டீர்கள் என எண்ண வேண்டாம். என்னால் முடிந்தவரை அவரது பாதையில் செல்ல நான் தீர்மானித்துள்ளேன் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்'' என்றார். (சிலோன் டெய்லி நியூஸ் 7 மே 1993. அழுத்தம் எம்முடையது)
சேவ வனிதா என்னும் பெண்கள் அமைப்புக்குத் தலைமை தாங்கிய திருமதி. பிரேமதாசா நாடெங்கிலும் பெண்களை ஒழுங்கமைப்பதிலும் சர்வதேச பெண்கள் தினத்தை பெரிய அளவில் கொண்டாடுவதிலும் பல வருடங்களாக ஈடுபட்டவர். சகல துறைகளிலும் பெண்களுக்குச் சமத்துவம் அளிக்கும் பெண்கள் சாசனம் (Women's charter) ஒன்றை உருவாக்குவதற்கும் தூண்டுதல் அளித்தார். அவரது அரசியல் ஸ்தானம் பரீட்சிக்கப்பட வேண்டியதே. மத்தியதரவர்க்கத்தால் புறக்கணிக்கப்பட்டாலும் ஏழைமக்களின் இதயங்களைக் கைப்பற்றுவதில் வெற்றியடைவாரா? அழுதும் சிரித்தும் அரசியலில் நுழைவதாக ஏற்கனவே அவரைப் பத்திரிகைக் கார்ட்டூன்கள் சித்திரிக்கத் தலைப்பட்டுள்ளன.
இன்னோர் சமீபகால விதவை சிறிமணி அத்துலத் முதலி. இவர் முன்னொரு போதும் அரசியலில் அறியப்படாதவர்; ஆர்வம் காட்டாதவர். சமீபத்தில் பத்திரிகை மாநாடு ஒன்றை நடாத்தி தனது கணவரின் கொலையால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதாக மேற்கு மாகாணத்தில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்குத் தலைமை தாங்கத் தீர்மானித்துள்ளதாய் அறிவித்தார். ''பொது வாழ்க்கையில் நுழைவதில் எனக்கிருந்த தயக்கம் கட்சியின் அங்கத்தவர்களது அளப்பெரிய தியாகங்களைக் கண்ட போது அகன்று விட்டது. அவரது உறுதியே லலித்தினது இலங்கை பற்றிய கனவை நனவாக்கும் **எனது கடமையான இப்பணியை** ஏற்கும்படி என்னைத் தூண்டியது.'' (ஐலண்ட் 14 மே 1993: அழுத்தம் எம்முடையது.) ஏற்கனவே செய்திப்பத்திரிகைகளில் அவரது புகைப்படங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சந்திரிகா குமாரணதுங்காவின் முதலமைச்சர் பதவியேற்பு வைபவத்தில் சந்திரிக்காவுக்கு அருகே நிற்கும் அவரது படம் ஐலண்ட் 22 மே இதழில் வெளியானது. இவையாவும் அரசியலில் அவரது எதிர்காலம் பற்றிய சுவையான வினாக்களை எழுப்புகின்றன. ஆனால் மேலும் சுவையானவை விதவைத்துவமும் அரசியலும் பற்றிய பொது வினாக்கள் ஆகும்.
துரதிர்ஷ்டம் வாய்ந்த ஒரு விதவை பெரும்பாலும் அரசியல்ரீதியாக அதிஷ்டசாலியான தலைவராக ஆவது எவ்வாறு? தந்தையை இழந்த தேசம் அவரது பெயரையும் பாரம்பரியத்தையும் தாங்கும் ஒரு தாயை நாடி நிற்கிறதா? கணவனிலிருந்து ஆளுமை மனைவியைச் சென்றடைகிறதா? அரசியல் அணி திரட்டலில் விதவைகளின் கண்ணீர் ஏன் பலம் வாய்ந்த சாதனமாகப் பயன்படுத்தப்படுகிறது? அரசியலில் ஈடுபடும் விதவை தனிமைப்படுத்தப்பட்ட வாழ்க்கையைக் கைவிட்டுத் தேர்தற்தொகுதியைக் ''திருமணம்'' செய்வதன் மூலம் தனது விதவைத்துவத்துவத்தை இழக்கிறாளா? இறந்து போன கணவரது அரசியல் இயக்கத்தின் உரிமை அவரது விதவையிடமே கையளிக்கப்படுவது ஒரு பொதுவான அரசியல் நடைமுறையாவதற்கான காரணம் யாது? இது பெண்களைப் பொறுத்தவரை நல்ல செய்தியா? அல்லது பலரும் சந்தேகப்படுவது போல சிவன் இன்றி சக்தி இல்லாத, ஆணாதிக்கத்தின் ஒரு அம்சமா?

'WIDOWS MIGHT IN SRI LANKA'
தமிழாக்கம்: சங்கரி
நன்றி: ஃப்ரண்ட் லைன்.

நன்றி - நூலகத்திட்டம்



## யாழ்ப்பாணம் இன்று - 5

# சிற்றூரவை; வைத்தது சட்டம் சொன்னது வேதம்

அருணா பரமேஸ்வரன்

யாழ்ப்பாணத்து மக்களுக்கு மகத்தான சோகங்கள் காத்திருந்தன. யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சொல்வதற்கு நிறையச் சோகக் கதைகள் இருந்தன.

அவர்கள் மீது அடிக்காத புயல் இல்லை; பெய்யாத மழையில்லை; கனலாக எரியாத வெயில் இல்லை; பனியாக நடுங்காத குளிர் இல்லை. ஒவ்வொரு சூழலிலும் நடுங்கி, வருந்தி,நைந்து, நொந்து வாழ்ந்தார்கள்.

கிராமங்கள் தோறும் புலிகளினால் சிற்றூரவை அமைக்கப்பட்டது. சிற்றூரவையின் முக்கிய நோக்கம் மக்களுக்கும் புலிகளுக்கும் தொடர்பு ஏற்படுத்துதல் என்பதுதான். ஆனால் தொடர்பு என்பது இரண்டாவது காரியம். முதற் காரியம் மக்களின் மனநிலையை புலிகளுக்கு அறிவித்தல். புலிகளுக்கு யார் ஆதரவாக இருக்கிறார்கள், யார் எதிர்ப்புணர்வு கொண்டவர்கள், எந்தெந்த இயக்கங்களில் யார்யார் இருந்தார்கள் எனும் தகவல்களைக் கொடுப்பதே சிற்றூரவையின் வேலை. இவ்வகையிலும் இது புலிகளுக்கும் பொது மக்களுக்கும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் அமைப்பாகத்தான் இருந்தது. சிற்றூரவையிடம் அதிகார மமதை இருந்தது.

புலிகளின் பிரதேசத் தளபதி குறுநில மன்னர். மாவட்டத் தளபதி சிற்றரசர். இந்த அமைப்பு முறையினுள் சிற்றூரவையினர் அதிகாரிகள். ஊருக்குள் அவர்கள் வைத்தது சட்டம். அவர்கள் சொன்னது வேதம்.

இவ்வாறான சூழலில் **மண் மீட்பு நிதி** எனும் பெயரில் ஒவ்வொரு குடும்பமும் இரண்டு பவுண் கட்ட வேண்டுமெனப் புலிகளினால் கட்டளையிடப்பட்டது. சிற்றூரவையினரே ஒவ்வொரு குடும்பத்தினரினதும் சொத்து விபரங்களைச் சேகரித்து வைத்தனர். குடும்பத்தைப் பொறுத்து நான்கு, ஐந்து பவுண் அவர்கள் கட்ட வேண்டும். ஒவ்வொரு குடும்பங்களையும் அழைத்து பவுண் கட்டவேண்டும் என வலியுறுத்திய புலிகளின் நிதிப் பொறுப்பாளர் ''ஒவ்வொருவரும் சொன்ன திகதிக்கு வந்து மரியாதையாகக் கட்டுங்கோ.எங்களை உலைக்க வேண்டாம். பவுணைக் கட்டுங்கோ என்று நாங்கள் கெஞ்ச மாட்டோம்''. என்று சொன்னார்.

இதன் பொருள் மக்களுக்கு விளங்கியது. 89 இல் நிவாரணப்பணம் என ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆயிரம் ரூபா வீதம் கிடைத்தது. அதற்காக இலங்கை வங்கிக் கிளைக்கு முன்னால் கால்கடுக்கக் கியூவில் நின்றார்கள். அதேபோலவே இரண்டு பவுண் கட்டுவதற்காகவும் மக்கள் கால்கடுக்க கியூவில் நின்றார்கள். தங்களுக்கு உற்சாகமாகப் பவுண் கட்ட மக்கள் நிற்கிறார்கள் என்று புலிகள் நினைக்கவில்லை. அவர்களுக்கு உண்மை என்னவென்று தெரியும். துப்பாக்கிக் குழலுக்கு மக்கள் அஞ்சுகிறார்கள். ''ஏன் சோலியை...''என்கின்ற யாழ்ப்பாண மனோபாவம் புலிகளுக்குப் புரியும். ஆனால், **''மண் மீட்பு நிதிக்காக மக்கள் மனமுவந்து நிதி கொடுக்கிறார்கள்''** எனப் பிரச்சாரப்படுத்தினார்கள்.

யாருக்கு இதனால் என்ன வருத்தம் வந்தது?

'வாயைக்கட்டி, வயிற்றைக் கட்டி'ச் சேமித்த பவுண். உங்களுக்குத் தெரியுமோ யாழ்ப்பாண மக்களை? ஒரு பத்து சதத்துக்காக அடுத்த ஹோல்ற் வரை நடந்து பஸ் எடுப்பார்கள். மரவள்ளிக் கிழங்கும் மாங்காய்ச் சம்பலும் அவர்கள் மூன்று நேர உணவாக எடுப்பதுமுண்டு. பனையின் கீழ் பன்னாடை பொறுக்கி, வேலியின் கிழுவையை ஒடித்து, புளிய மரத்து, மாமரத்துச் சுள்ளி பொறுக்கி விறகாக்குவார்கள். பனையிலும் பற்றையிலும் விளைகிற முசுட்டையும், மொசுமொசுக்கையும் அவர்கள் கறி. குரக்கன் புட்டும், வரகரிசிச் சோறும் அவர்கள் உணவு. சைக்கிள் தேசிய வாகனம். இன்னும் எளிமையாக வாழ இன்னும் என்ன வேண்டும்? திருவிழாவை, மேளச்சமாவை; சின்னமேளத்தை, வாணவேடிக்கையை ரசித்தார்கள். ஆயினும், காலையில் தோட்டங்களில் மண்வெட்டியுடன் அவர்களைக் காணலாம். கதிரமலை அண்ணையின் உடலில் எப்போதும் 'பொயிலை' நாறும். ஆட்டுக்குக் குழையும் அத்துடன் முசுட்டையும், மொசுமொசுக்கையும் ஆய்வதற்காக சரவணமுத்தண்ணை 'கொக்கத்தடி'யுடன் அலைவார்.

யாழ்ப்பாணத்து எளிமை வாழ்வைப்பற்றி நான் இன்னும் என்ன சொல்ல?



யாழ்ப்பாணத்தின் சீதனக் கொடுமை மறுபுறம். கல்வீடு, காணி,நகை இவ்வளவும் இருந்தால் பொன்னுருக்கலாம். இல்லாவிடில் மகள் உருகுவாள்.

இங்கு மக்கள், வங்கியை அதன் சேவையை நம்பியதில்லை. பவுணும் காணியும் தான் அவர்கள் சொத்து, சேமிப்பு.

வாயைக்கட்டி வயித்தைக் கட்டி சேமித்த பவுணைக் கொடுப்பதற்காக, வாயிலிருந்து எந்த முணுமுணுப்புமில்லாமல் கதிரமலையண்ணையும் சரவணமுத்தண்ணையும், இராசம்மாக்காவும் கால்கடுக்க நின்றார்கள்.

உங்களுக்குத் தெரியுமோ, என்னவோ அவர்கள் மனம் எரிந்ததை; அவர்கள் வயிறு எரிந்ததை; அவர்கள் வாழ்வும் எரிந்ததை.

பவுணைக் கட்டி விட்டு அழுத அம்மாக்களை நான் அறிவேன். பவுணைக் கட்டிவிட்டுக் வெற்றுக் கழுத்துடன் நின்ற மகளையும் அறிவேன். ஒவ்வொரு குடும்பத்திலும் சாவீடு நடந்தது.''பொடியங்கள் சாகிறாங்கள் இரண்டு பவுண் தானே?'' என்று தவித்த மக்களும் இருக்கிறார்கள்.

[illegible]ன் கட்டமுடியாது என்று சாதித்தவர்களும் இருந்தனர். அவர்கள் [illegible]ங்கருக்கு அனுப்பப்பட்டனர். இராணுவ முகாமை அண்டிய பிரதேசங்களில் பங்கர் வெட்டுவதற்கு அனுப்பப்பட்டனர். உயிரிழப்பு நிச்சயம் என்றவுடன் மனைவி எப்படியோ பத்தாயிரம் ரூபா காசைப் புரட்டிக் கொடுத்து விடுவாள். மரணதண்டனையிலிருந்து மீண்ட கைதியைப் போலத்தான் கணவன் வீடு வருவான்.

துயர் சூழ்ந்த இந்த நாட்களில் மக்கள் பல்வேறு வரிகளினால் வதைக்கப்பட்டனர். எதற்கும் வரி எனும் நிலை இருந்தது. ஒவ்வொரு பொருட்களுக்கும், ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் நூற்றுவீத வரி அறவிடப்பட்டது. இதனால் புலிகளை மக்கள் செல்லமாக வரிப புலிஎன அழைத்தனர்.

சோகக் கதை இங்கு தொடர்கதை. யாழ்ப்பாணத்து மக்கள் அவல வாழ்வு வாழ்ந்தார்கள். அவர்களுக்கு இருபக்கத்து இடி. ஸ்ரீலங்கா அரசு அவர்களை வஞ்சித்து;அழித்தது. புலிகள் அவர்களை வதைத்தார்கள். இருபக்க இடியையும் இயலுமானளவு தாங்கினார்கள்.

உங்களுக்கு இரண்டு கதை சொல்ல வேண்டும்.

ஒன்று: அளவெட்டியில் தற்கொலை செய்து கொண்ட கந்தையாவைப் பற்றிய கதை

(வரும்)

## ஒரு வார்த்தை எழுத விடு

# தமிழ் மொழித்தின விழா

அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற தமிழ் மொழித்தின விழாப் போட்டிகளில் முதலாம் இடம் பெற்ற சில நிகழ்ச்சிகள் சுவாமி விபுலாநந்த அடிகளார் நினைவு தினமான 1993.07.19 அன்று மாலை மூன்று மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. அத்துடன் பரிசளிப்பு வைபவமும் இடம் பெற்றது.

மிகச் சிறப்பாக அமைந்து, இதைப்பற்றிக் கட்டாயம் எழுத வேண்டும் என என்னுள் ஆவலைத் தூண்டிய விழாவல்ல இது.

வழமையாகிப் போன, சலித்துப் போன, நாட்டிலும், நகரங்களில் அவ்வப்போது நடைபெறுகின்ற சாதாரண விழாவைப் போலத்தான் இதுவுமொன்று.

அதிலும், கல்வி,உயர்கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவு நடாத்திய அரசாங்கம் சார்ந்த விழாவாகவே இது அமைந்து விட்டது.

அதனால்தான் தலைமை உரையை கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.இராஜமனோகரி புலேந்திரனும், சிறப்புரையை சுற்றுலாத்துறை ,கிராமியக் கைத்தொழிற்துறை அமைச்சர் திரு. தொண்டமானும், பேருரையை பிரதமமந்திரி திரு.ரணில் விக்கிரமசிங்காவும் நிகழ்த்தினார்கள்.

நிறைய அமைச்சர்கள் கலந்து கொண்டதால்,பார்வையாளர்களிலும் பார்க்க பாதுகாப்புப் படைப்பிரிவினர் அதிகம் காணப்பட்டனர். காக்கி உடையிலும், சிவிலிலும் மண்டபம் நிறைந்தனர்.

ஆனால்,இந்நிகழ்ச்சி தொடர்பாக என்னுள் சில கேள்விகள் எழுந்தன.

1) இவ்விழா மாணவர்களுக்குரியது. ஆனால் பிரமுகர்கள் தான் மண்டபத்தை நிறைத்திருந்தார்கள். ஏன்?

2) வடகிழக்கு மாகாணத்திலிருந்து பாடசாலைகள் பங்கு கொண்டன. ஆனால்'**கலைகளில் ஊறிச்சிறந்த**'யாழ்ப்பாண மாவட்டமும், கிளிநொச்சி, முல்லைத்தீவு,மன்னார் மாவட்டங்களும் இப்போட்டிகளில் பங்குபற்றவில்லையே? ஏன் அவ்விதம் நிகழ்ந்தது?

நான் அறிவேன்; புலிகளும் மாணவர்களைப் போட்டிக்கு அனுப்பச் சம்மதித்திருக்க மாட்டார்கள். ''நாங்கள் தானே வருடாவருடம் நிறையப்போட்டிகள் நடாத்துகிறோம்.இந்தப் போட்டிக்கு எங்கள் மாணவர்களை அனுப்பத்தான் வேண்டுமா?'' எனப் புலிகள் கேட்பார்கள். அதுவும் நியாயம் தான். ஆனால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு,மன்னார் மாவட்ட மாணவர்கள் இல்லாத இப் போட்டி முழுமையடைய மாட்டாது.வெற்றி பெற்றவர்களும் கூட பெரிதாகச் சந்தோஷப்பட ஒன்றுமில்லை.

அரசாங்கம் எல்லா மாவட்டங்களும் போட்டியில் கலந்து கொள்ள ஏதேனும் ஆவன செய்திருக்கிறதா?

3) இயல், இசை, நாடகம் என்பது முத்தமிழ் என்கிறார்கள். நாடகத்தைக் காணவில்லை. குறிப்பாகச் சமூக நாடகப் போட்டியில் முதலிடம் பெற்ற நாடகம் மேடையேற்றப்படவில்லை. அருகிலிருந்தவரிடம் விசாரித்த போது ''**வெளிச்சம்வெளியே இல்லை**''என்கின்ற நாடகம் முதாலாமிடமாம். ஆனால் 'அரசியல் புழுக்கத்தில்' அந்நாடகம் மேடையேற்றப்படவில்லை, என்றார். திருமதி.இராஜமனோகரி புலேந்திரனும் ''நாடகம் மாத்திரம் தான் தமிழ் என்று சொல்லமுடியாது'' எனப் பட்டும் படாமலும் ஏதோ சொன்னார். ஒன்றும்புரியவில்லை. அமைச்சரோ, அமைச்சு அதிகாரிகளோ இது குறித்து விளக்கம் தருவார்களா?

4) பிரதம மந்திரி தமிழில் பேசினார். தனது முதலாவது தமிழ்பேச்சு தமிழ் மொழித் தின விழாவில் இடம் பெறுவது மிகப் பொருத்தமானது என்றார் சந்தோஷம், அவரது தமிழார்வத்தை மெச்சுகிறோம். நிறையச் சொற்பிழைகளுடன் அவரது உரை அமைந்தது. மன்னிக்கலாம். அது வேறு விடயம்.

ஆனால், இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி டி.எஸ். சேனநாயக்கா காலத்திலிருந்து வருகிற எல்லாப் பிரதம மந்திரியும், ஜனாதிபதியும் தமிழிலும் உரையாற்றி இருக்கிறார்கள். ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் நாளும் நாளும்பெருகிக் கொண்டிருக்கிறது.

**''உடைகளைத் திருத்தலேன்?**
**உள்ளத்தைத் திருத்துங்கள்.**
**எடுத்துச் செல்லுங்கள்**
**எங்கள் உபதேசமிது''**

எனும் **வில்வரத்தினத்தின்** கவிதை வரிகள் ஞாபகம் வருகிறது.

அது போகட்டும், எமது மக்களின் மனோநிலையை என்னவென்பது? பிரதமர் தமிழில் பேசியவுடன் சந்திர மண்டலத்தில் இறங்கிய புளுகத்துடன், மண்டபத்தில் இருந்த பிரமுகர்களின் சந்தோஷம் என்ன, கைதட்டல் என்ன.ஏன் இந்த அடிமை மனோபாவம்?

இவைகள் தான் கேள்விகள்.இவ்வளவும் கூறி இந்த நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு வரி கூறாவிடின், பிழைதான்.**வவுனியா இறம்பைக் குளம் மகளிர் ம.வி.** இன் குழு நடனம் அழகு தான். பின்னணியில் மயில்கள் ஆட, மயில்களான அவ்விரு சிறு பெண்கள் சிரித்து சிரித்து சபையோரைக் கொள்ளை கொள்ள, முல்லை, மருத, நெய்தல் நிலம் காட்டி, அந்நியத் தொழில்களை வெளிப்படுத்தி, பண்டார வன்னியனையும் அவன் வீரத்தையும் எடுத்துரைத்து, கண்ணகி அம்மன் கோயில் வேப்பிலை ஆட்டமும், உருவேற்றலும், கவர்ந்திழுக்க அக்குழு நடனம் அழகாகத் தான் அமைந்தது. படைப்பாற்றல் அக்கலையில் மிளிர்ந்தது. நடன ஆசிரியரைப் பாராட்ட வேண்டும். **கொழும்பு நல்லாயன் பெ.ம.வி.**பாடசாலையின் நாட்டிய நாடகமும் குறிப்பிட வேண்டியது. மற்றயவை சாதாரண நிகழ்ச்சிகள் தான்.

-சூர்யா

நன்றி - நூலகத்திட்டம்



# இந்திய வம்சாவளி மக்களின் விடிவுக்கு வேறு வழி என்ன?

எஸ்.பி. செல்வம்
செயலாளர்
இலங்கை ஜனநாயக வாலிப முன்னணி
- மலையகப் பிரிவு

சரிநிகர் ஜூன் 1993 இல் வெளியான மலையகன் எழுதிய கட்டுரைக்கு பதில் எழுத வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக இதனை எழுதுகின்றேன்.

திரு.தம்பையாவின் கட்டுரையை மிகவும் ஆழமாகப் படிக்கும், சர்வதேசிய அரசியல் போக்கு நிலைப்பாடு, அதன் எதிர்காலம், சகல பிரச்சினைகளையும் இயங்கியல் ரீதியில் அணுகும் ஞானம் என்பனவற்றை கொண்ட ஒருவருக்கு கட்டுரையை வாசிப்பதில் சிக்கல் இருக்க முடியாது. மலையகன், தம்பையாவின் கட்டுரையை சரியாகப் புரிந்து கொள்ளும் திராணியற்றவராகத் தோன்றுகின்றார்.

தம்பையாவின் கருத்துப்படியும் புதிய ஜனநாயக கட்சியின் இரண்டாவது தேசிய மகாநாட்டின் தீர்மானங்களின் மூலமும் சர்வதேச அரசியல் வரலாற்றில் தேசிய இனப்பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்பட்டுள்ளது எனும் ஆய்வினை நடத்திய தன் மூலமே அவர்கள் இந்த இறுதி முடிவுக்கு வந்துள்ளதாக அறிய முடிகிறது.

பிரச்சினையின் தீர்வை ஆராயும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு புதிய ஜனநாயகக் கட்சி (10-12-91இல்) சமர்ப்பித்த மகஜரில் தேசிய இனப்பிரச்சினைக்கான குறைந்தபட்ச பிரேரணைகளில் ''பதினைந்தாவது'' கோரிக்கையாக வைக்கப்பட்டுள்ளது. மலையக மக்களுக்கான சுயாட்சி உள்ளமைப்பு சம்பந்தமானதாகும். இதில் கூறப்படுவதாவது ''மலையகத்தில் மலையக மக்களுக்கான வலுவுள்ள சுயாட்சி உள்ளமைப்பினாலும் ஏனைய சிறுஅளவிலான உள்ளமைப்புகளாலும் அவர்கள் நீண்ட காலம் போராடிப் பெற்று வந்தும் -வெறும் பெயரளவினதாக இருந்து வருவதுமான பிரஜாவுரிமை, வாக்குரிமை உட்பட பெற்றுக் கொள்ளவேண்டிய ஏனைய அடிப்படை உரிமைகளையும் பூரணப்படுத்தமுடியும். அதன் அடிப்படையில் அவர்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டு, பொருளாதாரம், வேலை வாய்ப்பு, கல்வி, வீடமைப்பு, சுகாதாரம், மற்றும் மொழி கலாசாரத்துறைகளிலான வளர்ச்சிக்கு முழுமையான வாய்ப்புக்கள் வழங்கப்படமுடியும்.'' என்பதாகும். இதனோடு தொடர்புபடுத்தியே சரிநிகரிலும் தம்பையா சுய நிர்ணய அடிப்படையிலான சுயாட்சி உப உள்ளமைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்றும், இதனை மலையக எல்லைகளுக்கு அப்பால் வாழும் மலையக மக்களுக்கு எவ்வாறு பொருத்த முடியும் என்றும் சுட்டிக் காட்டினார். இன்றைய அரசியல் போக்கில் முதலாளித்துவத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடே பிரதானமாகவும் அடித்தளமாகவும் விளங்குகின்றது. இதனைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாமை என்பதே மலையகன் தம்பையாவின் கட்டுரையை மேலோட்டமாக விமர்சிப்பதற்கு அடிப்படையாக அமைந்து இருக்கின்றது என நினைக்கிறேன்.

முதலாளித்துவம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள எத்தகைய ஈனச் செயல்களைச் செய்யும் என்பது வரலாறு கற்றுத் தந்த பாடம். பிரித்தாளும் சூழ்ச்சியினூடு மக்களை எவ்வளவுக்கெவ்வளவு பிரிக்க முடியுமோ அவ்வளவிற்குப் பிரிக்கும், பிரிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் முதலாளித்துவத்திற்கு உண்டு.

இதற்காக முதலாளித்துவத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காக அது பல தந்திரோபாய முறைகளைக் கையாண்டு வருகிறது. அதில் பிரதான பாத்திரம் வகிப்பது சாதி, இனம், மொழி, மதம் என்பதாகும். இந்த வார்த்தைகள் மக்களின் மனங்களை இலகுவில் குழப்புவதால் அதனை இலகுவாக முதலாளித்துவமும் தூக்கிப் பிடித்துப் பிரச்சினையைத் தீர்க்காது தூண்டி விடுவதில் கவனமாக இருக்கிறது.

ருஷ்யாவில் ஏற்பட்ட தேசிய இனப் பிரச்சினைகளை லெனின் மார்க்சிய மூலதத்துவத்தின் அடிப்படையில் எவ்வாறு தீர்வு காண முடியும் என்பதனையும், சுய நிர்ணய அடிப்படையிலான உரிமைகளை வழங்குவதன் மூலம் தீர்வுகள் எவ்வாறு சாத்தியப்படும் என்பதையும் தெளிவாகக் காட்டியுள்ளார். சுய நிர்ணய உரிமை பிரிந்து செல்லும் உரிமையே என்பதனை லெனின் வற்புறுத்திய போதும் ஐக்கியப்படுவதற்கான தேவையையும் அவசியத்தையும் வற்புறுத்தியுள்ளார்.

இதற்கு மாறாக தேசிய இனங்கள் பிரிந்து செல்லாமலும் சுயநிர்ணய உரிமையை வழங்க முடியும் என்பதனை தோழர் மாவோ சீனத்தின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணலில் கையாண்டு வெற்றியும் பெற்றார். குறுந் தேசிய வாத நிலைப்பாட்டில் இருந்து நாட்டின் முழு மக்களின் நலன்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார். திட்டங்கள் வகுத்தல் விவகாரங்களைக் கையாளுதல், பிரச்சினையைப் பற்றிச் சிந்தித்தல் போன்றவற்றில் நாட்டின் முழு மக்களையும் கவனத்தில் கொள்ளாது விட்டால் எவ்வாறான நடைமுறைப் பிரச்சினைகள் தோன்றும் என்றும் சுட்டிக் காட்டினார்.

இராவணா என்பவரால் செம்பதாகையில் (1982) சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? என எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியம். இதில் சீனாவைப் பற்றிக் கூறும் போது ''சீனாவிலோ ஹான் இனம் மொத்த சனத்தொகையில் 94% மாக உள்ள போது ஏனைய 54 சிறு தேசிய இனங்கள் ஆறு வீதமாக மட்டுமே உள்ளன. அத்துடன் அவை ஓரிடத்தில் செறிந்து வாழாமல் பரந்து, கலந்து வாழ்கின்றனர். ஓரளவிற்குச் செறிவான ஒரு தேசிய இனம் வாழும் பிரதேசம் சுயாட்சிப் பிரதேசமாக அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் ஐந்து சுயாட்சிப் பிரதேசங்கள் சீனாவிலுள்ளன. தேசிய இனங்கள் அதிகளவில் பரந்து கலந்து வாழும் நிலை காரணமாக குறிப்பிட்ட பகுதியில் செறிந்திருக்கக் கூடிய தேசிய இனங்களுக்கு அவை இருக்கக் கூடிய பகுதியைப் பொறுத்து சுயாட்சி சோக்குகளும் கவுண்டில்களும் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 29 சுயாட்சி சோக்குகளும் 69 சுயாட்சி கவுண்டில்களும் சீனாவில் உள்ளன''. இன்று 100 கோடி மக்களுக்கு மேலான சனத்தொகை கொண்ட சீனாவில் (அதுவும் 54 சிறுதேசிய இனங்களை கொண்டுள்ள போது) இனப் பிரச்சினை தீர்க்கப்பட முடியுமாயின் நமது நாட்டில் ஏன் இவ்வாறு தீர்வு காண முடியாது? சீனாவின் செயல் முறையை அப்படியே கையாள வேண்டும் என்ற வேண்டுதல் அல்ல. இதனைக் கவனத்தில் எடுத்து இலங்கையின் சமூக நிலைகளுக்கு ஏற்ப பிரயோகிக்க முடியும் என்பதே என் வாதம்.

இவ்வாறாகத் தம்பையாவின் நோக்கத்திற்கு ஏற்ப மலையக மக்களுக்கு என அமைக்கப்படும் சுயாட்சி உப உள்ளமைப்பினூடாக மலையக மக்களைத் தனித்து அடையாளம் காட்ட முடியும், என்பதோடு தன்னடையாளங்கள் அழிந்து வரும் நிலையிலிருந்து காப்பாற்றவும் முடியும். சுயாட்சி உப உள்ளமைப்புக்கள் மாகாண சபையைப் போலல்லாது சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும். மலையகப் பிரதேசத்தில் இடம் பெறும் குடியேற்றம், அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற ஒவ்வொரு நடவடிக்கையும் இவ்வமைப்புகளின் அனுமதியுடனேயே மேற் கொள்ள வேண்டும். இதனை மலையகன் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதனைத் தவிர ''வடமேல் மாகாணத் தமிழ் பேசும் மக்கள் இந்திய வம்சாளியினர் அல்ல அவர்கள் வடகிழக்குத் தமிழர்களைப் போல நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தை உடையவர்கள் ''என்கிறார்.

இது ஒரு வரலாற்றுப் புரட்டலாகும். உண்மையில் வடமேல் மாகாணத்தில் மட்டுமல்ல இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் மலையக இந்திய வம்சாளி மக்கள் வாழ்கின்றனர்.

கைக்கூலிகளாகக் கொண்டுவரப்பட்டு, ஆங்காங்கே சிதறிச் சென்றவர்களும், வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களும் இவ்வாறாக சென்றவர்களுள் அடங்குவர். இவர்கள் அங்கு பாதிக்கப்படும் போது மலையகத்தை நோக்கி நகர்ந்து... வருவதைப் பார்க்க முடிகிறது. அப்படியே இல்லாவிட்டாலும் மலையகத்தில் இவர்களைக் கொண்டு வந்து குடியேற்றும் அம்சத்தை தம்பையாவின் கட்டுரை குறிப்பிடவில்லை. அவர்கள் இருக்கின்ற பிரதேசங்களிலேயே சுயாட்சி உள்ளமைப்புகளை உருவாக்கி அவர்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும், என்பதேயாகும். அதுமட்டுமன்றி இவர்கள் வாழும் பிரதேசங்களில் உரிமைகள் பறிக்கப்பட்டால் அதற்கெதிராகக் குரல் கொடுப்பதும், போராடுவதும் மலையக சுயாட்சி அமைப்புகளின் கடமையாகும். அதே வேளை மலையகன் குறிப்பிடும் நகரசுத்தித் தொழிலாளர்கள் மலையகத்தைப் பற்றி அறியாதவர்கள் என்பது கிறுக்குத்தனமான வார்த்தைப் பிரயோகமாகும். அனேகமாக மலையகத்தைப் பற்றி தெரியாத தமிழ் மக்கள் (நகர சுத்தி தொழிலாளர்கள்) இல்லை எனலாம். ஏனென்ல இவர்கள் மலையகத்தில் இருந்து இடம் பெயர்ந்தவர்களேயாகும். இதனை மறுப்பதும் மலையக மக்களின் வரலாற்றைப் புரியாதவர் என்பதையே காட்டுகின்றது. மலையகத்தில் இருந்து பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களை விட, வெளி இடங்களில் வேலைக்காகவும், பாதுகாப்புக் காரணமாகவும் சென்ற மக்கள் கூடுதலான அடக்கு முறைகளுக்கு உள்ளானார்கள் என்பது உண்மையாகும். எனவே இம் மக்களுக்காக குரல் கொடுப்பது அவசியம். தம்பையா இதனைக் கண்டறிந்தே செய்துள்ளார். இது இடதுசாரிகளின் கடமைப்பாடும் கூட. இதனைத் தவிர்த்து ''மலையகன் கோட்பாடு'' இம்மக்களுக்கு எவ்வகையிலான முறையினைக் கையாண்டு விடிவைத் தேடி தரமுடியும் என்று விளக்க வேண்டும். கட்டுரையாளர் இவ்வட்டவணையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தியவம்சாளியினர் எவ்வெப்பிரதேசங்களில் உள்ளனர் என்பதை 1981ம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பு காட்டுகின்றது.
இந்தியத் தமிழர் - மொத்தம் - 8,25,233

| மாவட்டம் | இந்தியத் தமிழர் தொகை |
|---|---|
| கொழும்பு | 21,504 |
| களுத்துறை | 33,510 |
| கண்டி | 104,840 |
| மாத்தளை | 24,084 |
| நுவரெலியா | 247,131 |
| காலி | 11,067 |
| மாத்தறை | 13,931 |
| அம்பாந்தோட்டை | 308 |
| யாழ்ப்பாணம் | 20,001 |
| மன்னார் | 14,072 |
| வவுனியா | 18,592 |
| அம்பாறை | 1,410 |
| மட்டக்களப்பு | 3,868 |
| திருகோணமலை | 6,767 |
| குருநாகல் | 6,427 |
| புத்தளம் | 2,964 |
| அனுராதபுரம் | 785 |
| பொலனறுவை | 205 |
| பதுளை | 135,195 |
| மொனறாகலை | 9,164 |
| இரத்தினபுரி | 88,429 |
| கேகாலை | 43,879 |
| கம்பஹா | 5,732 |
| முல்லைத்தீவு | 10,766. |




## தனிச் சிங்கள மொழியும் தமிழ்க் கல்வி அமைச்சும்

மத்திய மாகாண கல்வி அமைச்சை தம் வசம் வைத்துக் கொண்டதாகவும், மத்திய மாகாண கல்வி அமைச்சர் ஒரு தமிழர் எனவும் பெருமைப்பட்டுக் கொண்டனர் இ.தொ.காங்கிரஸினர். ஆனால் நடைமுறையில் நடந்தது என்ன? அரசகரும மொழியாக சிங்களத்துடன், தமிழும் சம நிலைப்படுத்தப்பட்டு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் தமிழ் அமைச்சரைக் கொண்ட மத்திய மாகாண கல்வி அமைச்சின் கடந்த வருட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ் மாணவர்களுக்கு தனிச் சிங்கள மொழியிலேயே சான்றிதழ்கள் வழங்கும் அளவுக்கு இவர்கள் சாதனைகளைப் படைத்துள்ளனர். மத்திய மாகாண கல்வி அமைச்சை இவர்கள் பெற்றுக் கொண்டதன் மூலம் இவர்கள் மத்திய மாகாண தமிழ்க் கல்வி அபிவிருத்திக்கு பெரும் சாதனைகள் எதையும் படைக்கவில்லை. மாறாக மலையகக் கல்வியில் இவர்களின் அரசியலைப் புகுத்தி, தமக்குக் குடை பிடிக்காத, வாழ்த்துக் கோஷம் போடாத ஆசிரியர்கள், அதிபர்களை ஈவிரக்கமின்றி இடமாற்றம் செய்தமை, திறமையற்றவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கியமை, கல்வி நிர்வாகத்தில் அரசியல் ரீதியாக தலையிட்டமை போன்ற செயற்பாடுகள் மூலம் மலையக ஆசிரியர்கள் மத்தியில் விரக்தி நிலையை ஏற்படுத்தியதோடு மலையகக் கல்வியின் தரத்தை சீரழிக்க உதவியுள்ளனர். மலையகத்தில் பிரபல பெண்கள் பாடசாலையான கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கூட உயர்தர வகுப்பிற்கான ஆசிரியர் பற்றாக் குறையைப் போக்க பெற்றோர்கள் வருடக்கணக்கில் அலைந்து திரிந்தது போன்ற சம்பவங்கள் இந்த கல்வி அமைச்சு எந்த வகையில் தமிழ் கல்வி அபிவிருத்திக்கு உதவியது என்பதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

மலைநாளி

நன்றி - நூலகத்திட்டம்



சரிநிகர்
18/2,அலோசாலை
கொழும்பு -03
தொலைபேசி :576704

பிரதம ஆசிரியர் உ.சேரன்

# மூக்குப் போன கதை

தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, 'எதிராளிக்கு சகுனப் பிழையாக இருந்தால் சரி' என்பது ஒரு பழைய வாக்கு. தன்னுடைய மூக்குக்கும் இந்திராவின் மூக்குக்கும் இடையில் ஒரு ஒற்றுமை இருப்பதாக ஒருமுறை ஜே.ஆர். கூறியிருந்தார். தனது மூக்கின் மீது அவ்வளவு அக்கறை இருந்த போதும் கூட அவர் எதிராளியின் சகுனப்பிழையில் நிறையவே அக்கறை காட்டி வந்தார்

'பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக' நான் பிசாசுடனும் கூட்டுச் சேரத் தயார்' என்று அவர் அறிவித்தது இவற்றில் ஒரு சந்தர்ப்பம்.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும், ஜே.ஆரும் சரி அவர் பின் வந்தவர்களும் சரி நாடு எக்கேடு கெட்டாலும் சரி, தமிழ் மக்களின் உரிமைகளைக் கொடுத்து விடக் கூடாது என்பதிலேயே மிகுந்த அக்கறையுடன் இருந்து வந்திருக்கிறார்கள்.

ஜூலைக் கலவரம் முடிந்து பத்து ஆண்டுகளின் பின்னரும் இதுதான் நிலை. தமிழ் மக்களின் போராட்டம் பயங்கரவாதிகளின் போராட்டமாகக் குறுக்கப்பட்டு வெறிபிடித்த 'தமிழ் இனவாதிகளின்' யுத்தமாக சிங்கள மக்கள் மத்தியில் சித்திரிக்கப்படுகிறது. அண்மையில் ஜாதிக சிந்தனையவின் கூட்டமொன்றில் யுத்தம் தான் ஒரு தீர்வு என்று அறிவித்திருக்கிறார்கள். மாபோதி சங்கத்தால் வெளியிடப்படும் 'பௌத்த சிங்களய' என்ற பத்திரிகையின் அண்மைக்கால ஆசிரிய தலையங்கம் ஒன்று இவ்வாறு தெரிவிக்கிறது.

''யாழ்ப்பாணத்தில் பிரச்சினையின் போது அங்கிருந்த 40000 சிங்களவர்கள் அகதிகளாக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர். சிங்களவர்கள் வெலிகந்தவுக்கு அப்பால் போக முடியாது; மகா ஓயா 66ம் கட்டைக்கு அப்பால் போக முடியாது; ஹபரணைக்கு அப்பால்போக முடியாது உலகிலேயே சிறுபான்மையினால் அகதிகளாக்கப்பட்ட ஒரேயொரு இனம் - சிங்கள இனமே''!

ஆக,இன்னமும் தமிழ் மக்களின் பிரச்சினை என்பது வெறும் அர்த்தமற்ற 'ஆக்கிரமிப்பு மனோபாவம் கொண்ட தமிழர்களின்' வெறியாகவே சிங்கள மக்களுக்கு கற்பிக்கப்படுகிறது.

நாடு பிரிவதை அனுமதிக்கோம் என்று உரத்துக் குரலெழுப்பும் இவர்கள் அது ஏற்கனவே பிரிந்து போய் இருப்பதைக் கவனித்ததாகத் தெரியவில்லை.

பயங்கரவாதப் பிரச்சினை தெற்கில் வெடித்த போது அங்கு மின்சாரம் நிறுத்தப்படவில்லை; உணவு,மருந்து வசதிகள் தடுக்கப்படவில்லை; பாவனைப் பொருட்களின் விநியோகம் நிறுத்தப்படவில்லை; விமானங்கள் குண்டு போடவில்லை.

ஆனால் வடகிழக்கிலோ அவை தொடர்கின்றன. வேற்றுநாடொன்று என்ற அபிப்பிராயம் இல்லாவிட்டால் இப்படிப் பாரபட்சமாக எப்படி நடக்க முடியும்?

வெளியே சொல்லிக் கொள்ளாவிட்டாலும் உண்மையிலேயே இப்போது நடப்பது'பயங்கரவாதப் பிரச்சினையைத்' தடுப்பதற்கான யுத்தம் அல்ல!

மாறாக, ஏற்கனவே பிரிந்து விட்ட, பிரிந்து விட்டதாக இவர்கள் கருதுகிற ஒரு தேசத்தை பலவந்தமாக ஆக்கிரமித்து இணைத்துக் கொள்ள நடாத்தும் ஒரு யுத்தமாகவே இது இருக்கிறது.

இந்த யுத்தத்திற்காக கோடிக்கணக்கான பணம் செலவழிக்கப்படுகிறது; நாட்டின் பொருளாதாரம் வீணே அழிகிறது; நாளுக்கு நாள் நாடு கடனில் மூழ்குகிறது என்றெல்லாம் அரற்றும் ஆட்சியாளர்கள் அதைத் தீர்க்க எந்த முடிவும் எடுக்கவில்லை. எல்லா ஆக்கிரமிப்பாளர்களையும் போல, தமது இருப்புக்கு உறுதியான நியாயம் தேட, இப்பிரச்சினையை வாழவைத்துக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள்.

தமது நாடும், சிங்கள மக்களும் எவ்வளவுதான் பாதிக்கப்பட்டாலும் சரி தமிழ் மக்களுக்கு உரிமை கிடைக்காவிட்டால் போதும் என்பது தான் இவர்களது கோட்பாடு.

எதிராளியின் சகுனப்பிழையைப் பற்றி மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த ஜே.ஆருக்கு இரண்டு தடவைகள் மூக்கு உடைந்தது.

சிங்கள இனத்தின் இன்றைய 'காவலர்களாக' தம்மைக் கூறிக் கொள்கிறவர்களுக்கு மூக்கு மட்டுமல்ல முகமே இல்லாமல் போகிற நிலை என்றோ ஒரு நாள் வரத்தான் போகிறது.

அப்போது இவர்களைப் பாதுகாக்க யாராலும் முடியாது. இவர்களைப் பார்த்துச் சிரிக்க இவர்களது வரலாறு மட்டுமே எஞ்சி நிற்கும்.

மூக்குப் போன கதையைச் சொன்னபடி?

# விக்டர் ஐவன் மீண்டும் பேசுகிறார்



**1983** கறுப்பு ஜூலை நடந்திராவிட்டால் இலங்கையின் இனப்பிரச்சினை தீவிரமான கொடூர யுத்தமாக வளர்ச்சியடைந்திருக்காது. அதற்காக தமிழ்மக்கள் மத்தியில் அதிருப்தி வளர்ச்சியடையவில்லை எனக் கருத முடியாது. உண்மை என்னவெனில் அவர்கள் மத்தியில் அதிருப்தி நிலவிய போதும் அவர்கள் வன்முறை மூலம் பதில் சொல்ல நிர்ப்பந்திக்கப் படவில்லை. இளைஞர்களின் சில தீவிரவாதப் பிரிவுகள் வன்முறைப் பாதையில் நடவடிக்கைகளைக் கையாண்டன. ஆனால் அவை பெரிய எண்ணிக்கை கொண்டவையாக இருக்கவில்லை. அவை தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்டவையாகவும் இருக்கவில்லை.

1983 ஜூலைச் சம்பவங்கள் அதற்கு முன்பிருந்த நிலைமையில் முழுமாற்றமொன்றைக் கொண்டு வந்தது. முன்னரும் தமிழ் மக்களுக்கெதிரான தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. ஆனால் ஜூலையில் நடைபெற்ற செறிவான வன்முறைகள் பின்னர் வந்த தசாப்தத்தில் நடைபெற்ற வன்முறைகளின் கூட்டு மொத்தத்திற்குச் சமனானதாக இருந்தது. பொலிஸாரின் உத்தியோகபூர்வப் பதிவுகளின் படி முதல் ஏழு நாட்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 471. காயப்பட்டவர்கள் 3769. சூறையாடல் சம்பவங்கள் 3835ம், தீவைப்புச் சம்பவங்கள் 8077ம் பதிவு செய்யப்பட்டுள்ளன. உத்தியோகபூர்வக் கணக்கெடுப்பின்படி கொழும்பில் மட்டும் அகதிமுகாம்களில் 64000பேர் வரை இருந்தனர். ஏறக்குறைய சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த எல்லோரும் அகதிகளாக்கப்பட்டனர்.

சந்தேகத்திற்கிடமின்றி 1983 கறுப்பு ஜூலை,தமிழ் மக்களை ஒன்றில் தமக்கென அரசொன்றை அமைக்கும் நோக்கத்துடன் அல்லது பழிவாங்கும் நோக்கத்துடன் ஆயுதங்களை ஏந்தும் மாற்றுவழியைத் தீர்மானிக்க நிர்ப்பந்தப்படுத்தியது.

அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற ஜனநாயக அரசியல் இயக்கங்கள் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை இழந்து தமிழீழ விடுதலைப்புலிகள் போன்ற அமைப்புகள் அவர்கள் மத்தியில் நம்பிக்கை பெற்றன. இனச்சிக்கல் யுத்தமாக மாற வழிவகுத்த ஜூலைச் சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் என்ற அடிப்படையில் மக்கள் விடுதலை முன்னணி(JVP)இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி(CPSL)நவசமசமாஜக் கட்சி(NSSP) என்பவற்றை ஜூலை 30ஆம் திகதி அரசு தடைசெய்தாலும் அந்த மூன்று கட்சிகளும் அச் சம்பவங்களிற்கு எவ்வழியிலும் பொறுப்பல்ல என்பது வெளிப்படையானது. அப்படியாயின் அவற்றிற்கு பின்னால் இருந்தது யார்? அச்சம்பவங்கள் தமிழர்களுக்கெதிரான சிங்களவர்களின் கோபத்தின் தற்செயலான வெடிப்பா? இல்லாவிடில் அச் சம்பவங்கள் சில குறிப்பிட்ட சக்திகளின் நன்கு திட்டமிடப்பட்ட சதியின் விளைவுகளா?

உண்மையிலேயே இது தொடர்பாக பல்வேறு வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சில தமிழ்த் தலைவர்கள் அரசாங்கத்திற்கு இச்சம்பவங்களின் நேரடித் தொடர்பு இருப்பதாக நம்புகின்றனர்.ஜொனதன் ஸ்பென்சர்(Jonathan spencer)கணநாத் ஒபேசேகர (Gananath obeysekera)ஜேம்ஸ் மனர் (James manor) போன்ற விமர்சகர்கள் கூட இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். எப்படியானாலும், அரசாங்கத்திலுள்ள சில இனவாதத் தலைவர்கள் மட்டுமே அச்சம்பவங்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாகவே எல்லா விமர்சகர்களும் கருதினர். ஆனால் அரசாங்கத்தினாலேயே நன்கு திட்டமிடப்பட்டு, செயற்படுத்தப்பட்ட திட்டத்தின் விளைவுகளே அச்சம்பவங்கள் என நான் கருதுகின்றேன். அரசாங்கக் கட்சியிலுள்ள தமிழ் அரசியல்வாதியொருவரிடமிருந்து இரண்டு வருடங்களுக்கு முன்பு எனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலே இதனை நான் சொல்கின்றேன்.

இது தான் நடந்தது, சுருக்கமாக:

ஒரு மாலையில், எனது தமிழ் நண்பரொருவருடன், வெளிநாட்டுத் தூதுக்குழுவொன்றின் உறுப்பினரின் வீட்டிற்கு அவருடன் அளவளாவச் சென்றேன். நாங்கள் அங்கு சென்ற போது, அங்கே இன்னும் இரண்டு விருந்தினர் இருந்தனர். அவர்களில் ஒருவர் நம்மிருவருக்கும் மிகவும் தெரிந்தவர். மற்றவர் எனக்கு மட்டும் புதியவர். இந்த மற்றவர் ஐக்கிய தேசிய கட்சியின் பொருளாளரும், கொழும்பு மாநகர சபையின் பிரதிமேயருமான திரு.கணேசலிங்கம் ஆவார்.

திரு.கணேசலிங்கத்துடனான எனது முதலாவது சந்திப்பாக இருந்தாலும் அவர் காலஞ்சென்ற சிறில் மத்தியூவின் நல்ல நண்பர் என்பதை நான் அறிவேன். உங்களைப் போன்ற ஒரு தமிழரால் எவ்வாறு திரு. சிறில்மத்தியூ போன்ற வெறிபிடித்த சிங்களப் பேரினவாதத் தலைவருடன் நெருங்கிய நட்புறவை வைத்திருக்க முடிகிறது,என நான் கணேசலிங்கத்திடம் விளக்கம் கேட்க விரும்பினேன்.

அதனைப்பற்றி அவரிடம் வினவிய போது, சிறில் மத்தியூ தமிழ் மக்களுக்கு எதிரானவர் அல்லவென்றார். சிங்களச்சமூகத்தில் அவரது சாதி காரணமாக ஏற்றுக் கொள்ளப்படாமலிருந்த அவர், சிங்களச் சமூகத்தில் தன்னை ஏற்றுக் கொள்ளச் செய்யும் நோக்கத்துடன் சிங்கள இனவாதியாக நடந்து கொண்டாராயினும் உண்மையில் திரு.சிறில் மத்தியூ இனவாதியல்ல என்றார்.

என்னிடம் திரு. சிறில் மத்தியூவினால் எழுதப்பட்ட பல தமிழ் - எதிர்ப்புப் புத்தகங்கள் இருப்பதாக நான் கூறிய போது, அவருக்குத் தெரிந்தவரை சிறில்மத்தியூ சிங்களத்தில் ஒரு கடிதத்தைக் கூட எழுதத் திறமையற்றவர். அவரால் ஒரு புத்தகத்தை எழுதுவதென்பது நினைத்துப் பார்க்க முடியாத காரியமாகும் என அவர் கூறினார். அத்துடன் அநேகமாக மற்றவர்களால் எழுதப்பட்ட புத்தகங்களை அவர் தனது பெயரால் வெளியிட்டிருக்கலாம் எனவும் கூறினார்.

1981 மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் யாழ்பாணத்தில் நடைபெற்ற ஒழுங்கீனங்களில் சிறில் மத்தியூவின் பங்களிப்புப் பற்றி அவரிடம் கேட்டபோது,

அவர் அந்த தேர்தலின் போது கொழும்பிலிருந்து யாழ்பாணத்திற்கு சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் குழுவைச் சேர்ந்தவர். அத்துடன் யாழ்ப்பாணத்தில் அவர்கள் தேர்தலில் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டனர் என்பது உண்மையானாலும் அக் குழுவைச் சேர்ந்த காமினி திசாநாயக்கா, சிறில்மத்தியூ போன்றவர்களுக்கும் யாழ்ப்பாண நூல் நிலையத்திற்குத் தீ வைத்த சட்ட விரோத காரியத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. அப்போதைய யாழ்ப்பாணப் பொலிஸின் தலைவரான(BOSS)எட்வட் குணவர்தன (Edward Gunawardene)வே அதனைச் செய்ததாக கணேசலிங்கம் கூறினார். அத்துடன் சிறில் மத்தியூவோ, காமினி திசாநாயக்வோ அல்லது கொழும்பிலிருந்து சென்ற வேறெவருமோ எந்த விதத்திலும் நூல்நிலைய எரிப்பிற்குப் பொறுப்பல்லவெனவும் அவர்கள் அனைவரும் அச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தனர் எனவும் கூறினார்.

1983 ஜூலைக் கலவரத்துடன் தொடர்பான சம்பவங்களுடன் திரு. சிறில் மத்தியூவுக்கு எதுவித தொடர்புமில்லையா என்பதே எனது அடுத்த கேள்வியாகும். சிறில் மத்தியூவுக்கு மட்டுமல்ல அப்போதைய அரசாங்கத்தின் பிரதான தலைவர்கள் அனைவருக்கும் அதில் பங்குண்டு என்பது அவரது பதிலாக இருந்தது. அத்துடன் அரசாங்கத்தினாலேயே அச்சம்பவங்கள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அரசாங்கம் அதனைச் செய்வதன் நோக்கம் என்ன என அவரை நான் கேட்ட போது, அப்போது அரசாங்கத்திற்கெதிரான உணர்வுகள் சிங்கள மக்கள் மத்தியில் வளர்ந்து கொண்டிருந்தமை அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சியொன்றாக மாறக் கூடுமென அரசாங்கம் அஞ்சியதால் அரசாங்கத்தின் மேலிருந்த மக்களின் கோபத்தை திசை திருப்பவே அவ்வாறு செய்யப்பட்டதாக அவர் கூறினார். இன்று வந்தடைந்துள்ள பின்விளைவுகளைப் போல பாரிய விளைவுகள் பின்தொடருமென அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை.

ஒரு தமிழராக இருந்தும், இலங்கையின் அரசியலில் திருப்புமுனையாக அமைந்த அவ்வாறான கெட்ட சதியில் ஏன் பங்கு பற்றினீர்கள் என்று நான் அவரைக் கேட்டதற்கு, கணேசலிங்கம் இப்போது சற்றுக் குடிமயக்கத்தில் இருந்து சகஜநிலைக்கு வந்தவராகத் தென்பட்டார். அதிக தூரம் சென்று விட்டதை உணர்ந்த அவர் மேலும் எதனையும் வெளியிடுவதைக் கைவிட்டுவிட்டு அவர் சொன்ன எதனையும் வெளியிட வேண்டாமென என்னைக் கெஞ்சத் தொடங்கினார். பாதுகாப்பிற்காக இவரது பரிதாபமான வேண்டுகோளிற்கிணங்க இரு வருடங்களாக இது பற்றி எழுதுவதைத் தவிர்த்துக் கொண்டேன்.திரு. கணேசலிங்கம் தெரியப்படுத்தியவற்றை மக்களுக்குப் பகிரங்கப்படுத்த, இலங்கையின் அரசியல் வளர்ச்சியின் போக்கை மாற்றிய அந்த, முக்கியமான, கெட்ட வன்முறை நிகழ்வுகளின் 10ஆவது ஆண்டு நிறைவு மிகப் பொருத்தமான நேரமென நான் கருதியதாலேயே இக்குறிப்பை எழுதுகின்றேன்.

நன்றி; counter point

நன்றி - நூலகத்திட்டம்



# வெலிக்கடைக் கம்பிகளின் பின்னால்......,

## யூலை'83 படுகொலையில் தப்பிய ஒருவரின் நேரடி அனுபவம்

1983 யூலை மாதம் இலங்கையின் பல பகுதிகளிலும், தமிழர்கள்மீது திட்டமிடப்பட்ட முறையில் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்த வன்முறைகளின் உச்சக் கட்டமாக வெலிக்கடையில், தம்மைப் பாதுகாக்க முடியாத நிலையில் சிறை வைக்கப் பட்டிருந்த தமிழ் அரசியல்க் கைதிகள் 53பேர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் நிகழ்ந்தபோது சில கைதிகள் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினர். இந்தச் சம்பவத்தில் உயிர்தப்பிய 'அந்தோனி' என்பவரது அனுபவங்கள் இவை.

சிறை கடந்த
ட்டப்பட்டது.
இதில் பல பகு
சேர்க்கப்பட்
ின் எல்லாப்
ன் சென்ற
எனது நினை
கயில் இடங்க
அமைந்துள்ள
றேன். இதில்
லாம். பெண்
ப் பகுதி என்
றையின் பிர
ளியே இருந்
த்தின் வாச
களும் போல
உள்ளன.
றைச் சாலை
ய விதத்தில்
ம் chapel Se-
ழக்கப்படும்.
மான இதன்
தூக்குத் தண்
மூன்று மாடி
தன் முடிவை
ற்கூடம் உள்
வானத்திலி
ரு சிலுவை
ல் இருப்பதா
ப் பெயர் ஏற்
றத்தில் அதிக
பகுதி ஒன்று
secu se-
ரு சுற்று மதி
தற்குள் மிகத்
டுப்படுத்தக்
வைத்திருக்
ders section)
L section, H
டிடங்களும்,
க் கட்டிடமும்
இந்தக் கட்டி
பெயர்களின்
க் கொண்டு

மான YO
தில் ஒன்பது
முதலில் நான்
ன். ஆரம்பத்
இருந்தாலும்
வந்து ஆடி
பது ரா
ாதமும நாம்
க்காமற்தான்
ந்தது. (வாசற்
ன்று பார்க்கா
பட்டிருந்தன)
மு மணிக்கு
மாலை ஐந்து
ருக்கலாம். YO
வளியே செல்
ஒருவர் சந்
யதாக அனு
ஒவ்வொரு
வரை தனித்த
ட்டிடத்துக்கு
உடற்பயிற்சி
காவலுடன்)

சிறைக்கு
புகையைக்
பின்னேரம்
து சிறைக்கு
ங்களை எங்
தது. அன்று
சல்ல அனும

ால் சிலர்(சி
ன்
தைக் காண
தா விதத்தில்
க்குள் கொல்
எங்களைக்
வம் Chapel
அந்த நேரம்
ின் சகல பகு
ம் எழுபத்தி
ல் அரசியற்
மூன்றுமாடி
section இல்,
திக்கப்படும்

பகுதியுடன் இணைந்திருந்த பிரிவில் தான் (என நினைக்கிறேன்) குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் மற்றும் நீர்வேலி வழக்கில் தொடர்பு கொண்டோர் (ஆயுட் தண்டனை விதிக்கப்பட்டு ) இருந்தனர். இவர்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்ட போது எவரும் உயிர் தப்ப முடியவில்லை. இத்துடன் Chapel section இன் வேறு ஒரு பிரிவில் இருந்தவர்களும் படுகொலை செய்யப்பட்டனர். பொதுவாக இந்தப் பகுதிகளில் அப்போது பனாகொடயில் இருந்து கொண்டு வரப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் அதிகம் இருந்தனர். அப்போது குட்டிமணி, தங்கத்துரை மட்டுமே அங்கிருந்தனர்.

இவர்களை, நிர்வாகக் கட்டிடத்தின் முன் விறாந்தை போலுள்ள பகுதிகளில் விருந்தினர்கள் பார்வையிட வரும் போது நான் சந்தித்திருக்கிறேன். மற்றும் படி பார்ப்பது சிரமம் அல்லது சாத்தியமில்லை. அறிமுகமாக ஓரிரு வார்த்தைகள் மட்டுமே அங்கு பேச முடியும். குட்டிமணி போன்றோர் வெளியே உடற்பயிற்சி செய்யும் இடங்களைச் சுற்றி மேலே வலையால் மூடப்பட்டிருக்கும் (ஆகாய வழியால் ஹெலி மூலம் தப்பிவிடலாம் என அஞ்சி?).

இந்தப் படுகொலைகள் நிகழ்ந்த விதங்கள் பற்றிப் பலவிதமான செய்திகள் வெளிவந்தன. ஆனால் எவருமே தப்பாததால் இந்தக் தகவல்களில் எத்தனை தூரம் உண்மை இருக்கும் என்பதை என்னால் கூறமுடியவில்லை. ஆனால் மோசமான முறையில் அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டிருப்பர் என்பது எனது அபிப்பிராயம். ஆனால் இந்தச் சம்பவத்தில் பல அதிகாரிகள் நேரடியாக ஒத்துழைப்பு வழங்கியதைக் கண்ட காட்சிகள் உள்ளன.

இந்த நிலையில் சிறைக்குள் பதட்டமான நிலை நிலவுவதையும், சம்பவம் நிகழ்ந்ததையும் உணர முடிந்தது. அது பற்றி விசாரணைகள் விளக்கங்கள் ஏதோ நடப்பதாகவும் சில செய்திகள் எமது காதிலும் விழுந்தன.

26ஆம் திகதி காலை YOஇல் இருந்த எங்கள் ஒன்பது பேரையும், நாங்கள் இருந்த கட்டிடத்தின் மேல் மாடிக்கு அழைத்து சென்றார்கள். அங்கு நாங்கள் வழமையாகச் செல்வதில்லை. மேல்மாடி மிகவும் புழுக்கம் நிறைந்ததாக இருந்தது. அத்துடன் மிக மோசமாகத் துப்பரவற்று இருந்தது. அன்று தான் நீரூற்றித் துப்பரவு செய்ததால் ஈரமாக இருந்தது. Chapel sectionஇன் மூன்றாவது பிரிவில் இருந்ததால் தப்பியவர்களையும், நாங்கள் இருந்த கட்டிடத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவர்களை நாங்கள் இருந்த ஒன்பது அறைகளில் மும்மூன்று பேராக அடைத்தார்கள்.

நாங்கள் 'ஒழுங்காக' இருந்ததால் கீழே நாங்கள் இருந்த போது எங்களுக்கு ஒரு மேசை தந்திருந்தார்கள். இரண்டு, மூன்று கதிரைகளும் இருந்தன. பிறகு நாங்கள் ஒன்பது பேராகிய பிறகு நான்காவது கதிரையும் கிடைத்தது. இந்த மேசைதான் எங்களது சந்திப்பு இடமாகவும் நாங்கள் சாப்பிடும் இடமாகவும் இருந்தது. இவற்றை நாங்கள் மேலே போனபோது கொண்டு சென்று விட்டோம். அன்று மத்தியானம் நாங்கள் சாப்பிட்டோமா இல்லையா என்பது (சாப்பாட்டு நேரம் 12 மணி) நினைவில்லை. அப்போது எம் மத்தியில் பயமும் பதட்டமும் நிலவியது. இரண்டு மணியளவில் வெளியே பெரும் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. நாங்கள் மேலே இருந்த ஜன்னலின் அருகாக மேசையை நகர்த்திச் சென்று வெளியே பார்த்தோம்.

நாங்கள் இருந்த Maximum security section இன் சுவர்களைத் தாண்டிப் பல கைதிகள் குதித்து வருவதைக் காண முடிந்தது. உள்ளே வந்தவர்கள் காவலாளியிடம் திறப்பைப் பறித்தார்களோ என்னவோ, எமது கட்டிடத்தின் உட்பகுதி வரை வந்து விட்டார்கள். அவர்கள் பெரும் தொகையினராக இருந்தனர். அவர்களிடம் அலவாங்கு, கோடரி போன்ற ஆயுதங்கள் இருந்தன. இதனால் அவர்களால் எந்தப் பூட்டையும் இலகுவாக உடைக்க முடிந்தது. ஏற்கனவே Chapel section இல் இருந்து வந்தவர்கள், தமது சகாக்களுக்கு நிகழ்ந்த அனுபவங்களை அறிந்திருந்ததாலும், நாம் இவற்றைக் கேள்விப்பட்டதாலும் இதை எதிர்ப்பது என்ற உறுதியும் ஆயத்தமும் எங்கள் அனைவரிடமும் இருந்தது.

நான் எங்களிடம் இருந்த மேசையை உடைத்துக் காலை எடுத்தேன். எம்மில் ஐந்துபேர் வரையில் தான் உறுதியோடு போராடக் கூடிய நிலையில் இருந்தோம். நான்கு கால்களும் நால்வரிடம் இருந்தன. ஏனையோர், வயதானவர்கள் அல்லது உடல் ரீதியாக உறுதியற்றவர்கள். ஒவ்வொருவரும் ஏதோ எமக்கு இயன்றவகையில் அவர்களை எதிர்த்தோம். எங்களிடம் ஒரு பெட்சீட்டும் இருந்தது. வந்தவர்கள் கதவின் பூட்டை உடைத்து விட்டிருந்தனர். ஆனால் அவர்கள் கதவைத் திறப்பதற்கு உட்புறம் கையை விட்டுக் கொழுக்கியை விலத்த வேண்டி இருந்தது. அவர்கள் அவ்வாறு திறக்க முயற்சி செய்யும் ஒவ்வொரு தரமும் நாம், மேசைக் கால்களால் அவர்களது கைகளை நோக்கித் தாக்கினோம். இதனால் அவர்கள் உள்ளே வரமுடியாமல் இருந்தது.

## பூட்டை உடைத்து இழுத்தெறிந்தார்கள்

வந்தவர்கள் கதவின் பூட்டை உடைத்து விட்டிருந்தனர். ஆனால் அவர்கள் கதவைத் திறப்பதற்கு உட்புறம் கையை விட்டுக் கொழுக்கியை விலத்த வேண்டி இருந்தது. அவர்கள் அவ்வாறு திறக்க முயற்சி செய்யும் ஒவ்வொரு தரமும் நாம், மேசைக் கால்களால் அவர்களது கைகளை நோக்கித் தாக்கினோம். இதனால் அவர்கள் உள்ளே வரமுடியாமல் இருந்தது.
நாம் சற்றும் எதிர்பாராத விதமாகக் கதவு தானாகத் திறந்தது. இந்த நிலையில் டொக்டர் ராஜசுந்தரம் வெளியே இழுபட்டு விட்டார். இந்த நிலையில் கதவு திறப்பதும் மூடுவதுமாக இழுபட்டது. நாம் உயிருடன் போராடும் நிலையில் அவர்களை எதிர்த்துப் போராடினோம். அவர்களும் மிக மோசமாக எம்மைத் தாக்கினர்.

நாம் சற்றும் எதிர்பாராத விதமாகக் கதவு தானாகத் திறந்தது. இந்த நிலையில் டொக்டர் ராஜசுந்தரம் வெளியே இழுபட்டு விட்டார். இந்த நிலையில் கதவு திறப்பதும் மூடுவதுமாக இழுபட்டது. நாம் உயிருடன் போராடும் நிலையில் அவர்களை எதிர்த்துப் போராடினோம். அவர்களும் மிக மோசமாக எம்மைத் தாக்கினர்.

இந்த நிலையில் சிறைச்சாலையின் மேலே ஹெலி வட்டமிட்டபடி இருந்தது. (25 ஆம் திகதியும் படுகொலைகள் நிகழ்ந்த போது இவ்வாறு ஹெலி வட்டமிட்டதை நாங்கள் அவதானித்திருந்தோம்.) ஏறத்தாழ அரைமணி நேரத்தின் பின் கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்பட்டன. இந்த நிலையில் எங்கள் பகுதிக்குள் சில கொலைஞர்கள் அகப்பட்டு விட்டார்கள்.

எமக்குக் கீழே நாங்கள் இருந்த 'செல்'களில், மொத்தம் 27 பேர் இருந்தனர். இவர்களில் இரண்டாவது தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர். ஏனைய ஒன்பது பேரும் தமது தீரத்தாலும் மதிநுட்பத்தாலும் மட்டுமே உயிர் தப்பினர். மூன்று 'செல்' களில் தான் கைதிகள் தப்பினர் என நினைக்கிறேன். (அந்தமூன்று செல்களிலும் இருந்தவர்களில் ஒருவர் உயிரிழந்திருக்க வேண்டும்) அவர்கள் முன்பே இவ்வாறான நிலைக்குத் தமக்குள் சில திட்டங்களைத் தீட்டித் தாயாராக இருந்தனர். இவர்களில் சிலர் தமது கறிகளை சாப்பிடாமல் வைத்திருந்தனர். ஒருவர் தடியொன்றை வைத்திருந்தார். சிறுநீரையும் சேமித்து வைத்திருந்தனர். எறியக்கூடிய சில பொருட்களையும் வைத்திருந்தனர்.

இராணுவம் உள்ளே வந்த பிறகு, பதினெட்டுப் பேரதும் சடலங்களை 'செல்'களில் இருந்து வெளியே இழுத்துப் போட்டு விட்டுத் தான் மேலே வந்தனர். அதற்கிடையில் எம்மிடம் சிக்கியவர்கள் தமது உயிரை க் காப்பாற்றுமாறு எமது கால்களில் விழுந்து விட்டனர். இல்லாவிடின் அன்று அவர்களில் ஒருவராவது உயிரிழந்திருக்கக் கூடும். அன்று மேலே வந்தவர்களில் சேபால ஏக்கநாயக்காவும் ஒருவன். அவன் வந்ததைப் பற்றி ஆச்சரியப்பட எதுவுமில்லை.


மேலே இராணுவத்தினர் நால்வர்( கண்ணீர்ப் புகைப் பாதுகாப்பு முகமூடிகளுடன் ) வந்து எங்கள் அனைவரையும் முழந்தாளில் இருக்குமாறு பணித்தனர். எம்மைத் தாக்க வந்து எஞ்சியிருந்தவர்களிடம் ராணுவத்தினர் ஏதோ கூற, அவர்கள் ஓடிவிட்டனர். அப்போது, நாம் சுடப்படப் போகிறோம் என்ற உணர்வுதான் ஏற்பட்டது. அவ்வாறு நிகழ்ந்திருந்தாலும் யாருக்கும் தெரிய வந்திருக்காது. இப்போதும் வெலிக்கடையில் என்ன நிகழ்ந்தது என்பது உண்மையில் யாருக்கும் தெரியாதல்லாவா? பின்பு எங்களை எழச் சொன்னார்கள். சோதனையும் நடந்தது. எதற்காக என்பது யாருக்கும் தெரியாது.

பின்பு நாங்கள் கீழே கொண்டு வரப்பட்டோம். எங்கள் எல்லோருக்கும் நிகழ்ந்த போராட்டத்தில் காயங்கள் ஏற்பட்டன. எனக்கு தலையில் காயம் இருந்தது. நாங்கள் அனைவரும் கையை உயர்த்தியபடி வெளியே வந்த போது, ஏராளமானோர் எமது கட்டிடத்தைத் தள்ளி நின்றனர். சிறை அதிகாரிகள் சிலர் எங்களை நோக்கி வந்தனர். சிலர் அனுதாபமான முறையிலும் சிலர் அலட்சியாமான முறையிலும் இருந்தனர். ஏறத்தாழ ஒரு மணிநேரத்தின் பின்னர் எங்களில் ஒரு தொகுதியினர் கைவிலங்கிடப்பட்டு, அங்கு வந்த ட்றக் ஒன்றில் ஏற்றப்பட்டோம்.

ட்றக் புறப்பட்ட போது, எங்களை டிறக்கினுள் நிலத்தில் படுக்குமாறு பணித்தனர். அன்று நீண்ட நேரமாக ட்றக் பயணம் செய்த்து. எங்கு போகிறோம் ஏன்று புரியவில்லை. நாங்கள் எழுந்திருக்கக் கூட அனுமதிக்கப்படவில்லை. ட்றக்கினுள்ளேயே சிறுநீர் கழிக்க வேண்டிய நிலைதான் இருந்தது. மறுநாள் காலை ஏழு மணியளவில்தான் மீண்டும் ட்றக் புறப்பட்டு ஓரிடத்தில் வந்து நின்றது. அது ஒரு விமான நிலையம் என்பதை எம்மால் ஊகிக்க முடிந்தது.

அங்கு எம்மை விமானத்தில் ஏற்றினர். அங்கிருந்து நாம் மட்டக்களப்பு கொண்டு செல்லப்பட்டோம். மட்டக்களப்பில் வேறு பலருடன் நாம் சிறையில் இருந்தோம். அங்கு ஏறத்தாழ இரு மாதங்கள் இருந்தோம். அங்கிருந்த 80 பேரில் அதிகமானோர் மேல் மாடியில் இருந்தனர். எங்களால் ஒரு வானொலியும் வைத்திருக்க முடிந்தது. அப்போது, எம்மில் எல்லோரும் தமிழர்கள் என்பதால், எங்களால் கொஞ்சம் உறுதியோடு இருக்க முடிந்தது. இதன் பின்னர் மட்டக்களப்பு சிறை உடைக்கப்பட்டது பற்றியும், அங்கிருந்து(நான் உட்பட) கைதிகள் தப்பியது பற்றியும் அனேகமாக எல்லோரும் அறிந்திருப்பர்.

(இந்த நிகழ்ச்சிகளில் சம்பந்தப்பட்ட பலரது பெயர்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் வெளியிடப்படவில்லை.)




வெலிக்கடைச் சிறையைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள 15 அடி உயரமான வெளிச் சுவர்

நன்றி: சுவடுகள்.

நன்றி - நூலகத்திட்டம்



'தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு மீளாய்வை நோக்கி...' என்ற தொடரின் முதலாவது பகுதி இத்துடன் முற்றுப் பெறுகிறது. இதன் இரண்டாவது பகுதியான விடுதலை இயக்கங்கள் தொடர்பான வரலாற்றுக் குறிப்புகளை சில காலங்களில் மீண்டும் தொடராக எழுதும் உத்தேசம் உண்டு

அக்கட்டுரையில் தலைப்புக்கேற்றபடி, மீளாய்வுக்கான அடிப்படைக் ஆதாரக்குறிப்புகளை இத்தொடர் தொகுத்துத் தந்துள்ளது என்று நம்புகிறோம். இவற்றில் ஏதாவது விடுபட்டிருக்க கூடும்; தவறுகள் ஏற்பட்டிருகக்கூடும். இவற்றைச் சுட்டிக் காட்டுமாறு வாசகர்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பாக இக்கால கட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற சம்பவங்கள், உருவான போக்குகள் தொடர்பான சரியான விபரங்களைத் திரட்ட முடியவில்லை.

அத்துடன் உத்தேச இரண்டாம் பகுதிக்கும் பயன்படக்கூடிய தகவல்களையும் அவற்றை வைத்திருப்பவர்கள் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆ-ர்

# தேசிய விடுதலைப் போராட்டம் ஓர் மீளாய்வை நோக்கி.... - 18

## கி.உ.ச வும் தே.வி. போராட்டமும்

**1980** களில் தோற்றம் பெற்ற கிராமிய உழைப்பாளர் சங்கம் அதுவரைகாலமும் தேசிய இனப்பிரச்சினையில் அதிகளவு அக்கறை கொள்ளாமல் இருந்த வறிய கூலி விவசாயிகளை தேசிய இனப்பிரச்சினையில் அக்கறை கொள்ளச் செய்தது.இதற்காகவே ''சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்'' என்ற நாடகத்தையும் திருத்தங்கள் செய்து மேடையேற்றியிருந்தது. இவ்வாறு தேசிய இனப்பிரச்சினையில் அக்கறை கொண்டிருந்தாலும் தமது சொந்த மக்களின் பிரச்சினைக்காக போராடுவதைக் கைவிடவில்லை. தேசிய இனப்போராட்டத்தில் ஈடுபடுகின்ற அதேவேளை வறிய கூலி விவசாயிகளின் அடிப்படை உரிமைகள வென்றெடுப்பதற்காகவும் போராடினார்கள். ஆனால் முன்னர் செல்வந்த மக்களின் உரிமைகளுக்காகத் தனித்துப போராடிய நிலைமாறி விடுதலை இயக்கங்களையும் இணைத்துப் போராடினார்கள். இவர்களால் நடாத்தப்பட்ட புன்னாலைக்கட்டுவன் மத்தானோடை கூலி உயர்வுப் போராட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் பங்கு பற்றிஇருந்தார்கள். புத்தூர் காணிப் போராட்டத்தினை விடுதலை இயக்கங்களுடன் கூட்டுக் கமிட்டியை உருவாக்கி நடாத்தினார்கள். இவற்றைவிட ஈ.பி.ஆர்.எல்.எப் இன் தொழிற்சங்கமான கிராமிய தொழிலாளர் சங்கம் நடாத்திய உரும்பிராய் காணிப் போராட்டம், புன்னாலைக்கட்டுவன் பாதைப் போராட்டம் என்பவற்றில் தாமும் பங்கேற்றிருந்தார்கள். இப் போராட்டங்களின் சிறப்பு யாதெனில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்ற வந்த உயர்சாதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இவற்றில் பங்குபற்றியமையாகும். புத்தூர் காணிப் போராட்டத்தில் இவ் இளைஞர்களின் உயர்ந்த பங்களிப்பினை சிறப்பாக காணக் கூடியதாக இருந்தது. இப் போராட்டங்களில் பங்கு பற்றிய பின்னரே அவர்கள் வறிய கூலி விவசாய மக்கள் எதிர்நோக்குகின்ற ஒடுக்குமுறைகளின் கொடூரத்தன்மைகளை உணர்வுபூர்வமாக உணர்ந்தார்கள். அத்தோடு தேசியப் போராட்டத்துடன் அவை இணைக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்தார்கள்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் இவர்களுடைய மற்றுமோர் சிறந்த பங்களிப்பு தேசியப் போராட்டத்தில் மக்கள் போராட்டத்தை வலியுறுத்தியமையாகும். மக்கள் போராட்டம் ஒன்றினாலேயே தேசிய இனவிடுதலையை வென்றெடுக்க முடியும் என இவர்கள் ஆணித்தரமாக வலியுறுத்தினார்கள். இதற்காக கிராமங்கள் தோறும் கருத்தரங்குகளை நடாத்தியதோடு மட்டுமல்லாது மக்கள் போராட்டத்தினை சித்திரிக்கும் வகையில் வீதி நாடகத்தையும் நடாத்திக் காட்டினார்கள். இவ் வீதி நாடகத்தில் மக்கள் போராட்டம் என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன? என்பதை விளக்கியதோடு மட்டுமல்லாமல் வியட்நாமில் நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் அனுபவத்தையும் எடுத்துக் காட்டினார்கள். இந்த வீதி நாடகமும், மக்கள் போராட்டம் பற்றிய இவர்களது பிரச்சாரங்களும் மக்கள் போராட்டம் என்று கூறிக் கொண்டு தனிநபர் பயங்கரவாதச் செயல்களிலும் மக்களின் மேல் ஆதிக்கம் செலுத்துகின்ற செயல்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்த விடுதலை இயக்கங்களின் நடவடிக்கைகளைத் துகிலுரித்துக் காட்டுவதாக அமைந்திருந்தன. இவர்களின் இப்பிரச்சாரங்களின் பின்னரே மக்கள் போராட்டம் பற்றிய விவாதங்கள் விடுதலை இயக்கங்களால் மேற்கொள்ளப்பட்டன.

இவர்களுடைய இவ்வேலைகளுக்குப் புறம்பாக நெருக்கடி காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுகின்ற பணிகளிலும் இவர்கள் ஈடுபட்டார்கள். இந்திய இராணுவத்தின் தாக்குதலின் போது அகதிகளாக வெளியேறிய மக்களை சிறுப்பிட்டி போன்ற இடங்களில் முகாம்களை அமைத்துப் பாதுகாத்தார்கள். அவர்களுக்கு உணவு, கல்வி போன்ற நிவாரண வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

இவற்றினைவிட வறிய கூலி விவசாயிகளை மோசமான பாதிப்புக்கு உள்ளாக்கும் கசிப்பு உற்பத்திக்கு எதிரான போராட்டத்தையும் நடாத்தினார்கள். மக்களைக் கொண்டு போராட்டம் நடாத்தி வறிய கூலி விவசாயிகளின் கிராமங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கசிப்பு உற்பத்திகளை நிர்மூலம் செய்வதோடு அதனை நிர்மூலமாக்க வேண்டிய அவசியத்தையும் மக்களுக்கு எடுத்துக் கூறினார்கள். இவர்களுடைய பிரச்சாரத்தினால் உணர்வூட்டப்பட்ட இளைஞர்கள் பலர் தாங்கள் உற்பத்தி செய்த கசிப்பையே நிர்மூலமாக்கிய பல சம்பவங்கள் இவர்களுடைய கிராமங்களில் நடைபெற்றுள்ளன. இவர்கள் இதற்கு எதிராக போராடத் தொடங்கிய பின்னர்தான் விடுதலை இயக்கங்களும் கசிப்பு உற்பத்திக்கு எதிரான நடவடிக்கைகளில் அக்கறை காட்டத் தொடங்கின.

இவ்வாறு தமது சொந்தமக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகவும், தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும், கிராமிய உழைப்பாளர் சங்கத்தினர் முக்கிய பங்கினை ஆற்றியுள்ள போதும் இவ்வமைப்பு பல குறைபாடுகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது. இக் குறைபாடுகளில் முக்கியமானது இவர்கள் தம்மை ஒரு அரசியல் சக்தியாக வளர்க்காமை ஆகும்.

தேசிய விடுதல்ப போராட்டம், வர்க்கப் போராட்டம், மக்கள் போராட்டம் என்பன தொடர்பாக இவர்கள் தங்களுக்கென ஒரு அரசியல் கருத்தைக் கொண்டிருந்தனர். எனினும் அவ் அரசியல் கருத்துக்களை அடிப்படையாக வைத்து ஓர் அரசியல் சக்தியாக தம்மை உயர்த்திக் கொள்ளும் முயற்சிகள் எதிலும் இவர்கள் ஈடுபடவில்லை. மாறாக,வெறும் சீர்திருத்த தொழிற்சங்க நடவடிக்கைகளோடு மட்டும் தம்மை குறுக்கிக் கொண்டார்கள். இதனால் இவர்களுடைய பிரச்சார விளைச்சல்களை எல்லாம் விடுதலை இயக்கங்கள் இலேசாக அறுவடை செய்து கொண்டன. இவர்களுடைய பிரச்சாரங்களினால் வளர்க்கப்பட்டவர்கள் ஆரம்பத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இலும் பின்னர் புலிகள் இயக்கத்திலும் அணியணியாகச் சேரத் தொடங்கினர். இவர்கள் முன்வைத்த அரசியற் கொள்கைகளையே ஈ.பி.ஆர்.எல்.எப் உம் பிரச்சாரம் செய்ததினால் வறிய கூலி விவசாய மக்கள் முதலில் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தையே தங்களது தேசிய இயக்கமாகக் கொள்ளத் தலைப்பட்டனர். இவர்கள் தமது ''சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்'' என்ற நாடகத்தை மேடையேற்றிக் கொண்டிருந்த வேளையில் அதில் ஒரு பாத்திரம் உங்கள் தேசிய விடுதலை இயக்கம் எது எனக் கேள்வி கேட்ட போது பார்வையாளர்களாக இருந்த மக்களிடமிருந்து ''ஈ.பி.ஆர்.எல்.எப்'' என உரத்த சத்தத்தில் பலதடவைகள் பதில் வந்தது. இவ்வளவிற்கு இவர்களது நாடகம் ஈ.பி.ஆர்.எல்.எப் இற்கு பிரச்சாரமாக அமைந்தது.

குடாநாட்டில் ஈ.பி.ஆர்.எல்.எப் தடை செய்யப்பட்ட பின்னர் தேசிய விடுதலையை முன்னெடுக்கின்ற இயக்கமாகப் புலிகள் இருந்தமையால் இவர்களின் பிரச்சாரங்கள் புலிகள் இயக்கத்திற்கு சாதகமாக அமைந்தன. இவர்களால் வளர்க்கப்பட்ட ஒரு இளைஞன் புலிகள் இயக்கத்தில் சேர்ந்த போது இவர்கள் அவனைக் கேட்டார்கள் ''ஏன் இயக்கத்தில் சேர்ந்தாய்'' என்று. அதற்கு ''நீங்கள்தானே தேசிய விடுதலைப் போராட்டத்தில் எல்லாரும் பங்கு பெற வேண்டும் எனக் கூறினீர்கள். புலிகள் மட்டும் இன்று தேசிய விடுதலைக்காகப் போராடுகின்றார்கள் அதனால் நான் அவர்களுடன் சேர்ந்தேன்'' என அவன் பதிலளித்தான்.

கிராமிய உழைப்பாளர் சங்கம் விட்ட இன்னொரு தவறு தமது பணிகளைச் சாதியால் ஒடுக்கப்பட்ட வறிய கூலி விவசாயிகளுடன் மட்டும் குறுக்கிக் கொண்டமையாகும். சாதியால் ஒடுக்கப்பட்ட இவர்களுக்குப் புறம்பாக உயர்சாதியைச் சேர்ந்தவர்களிலும் கணிசமானளவு வறிய கூலி விவசாயிகள் குடாநாட்டில் இருந்தார்கள் இவ் விவசாயிகளை இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகள் எதிலும் இவர்கள் இறங்கவில்லை. இவற்றை விட குடாநாட்டிற்கு வெளியே இருந்த வறிய கூலி விவசாயிகள் மத்தியில் பணிபுரிவதற்கும் இவர்கள் முயலவில்லை. குடாநாட்டிற்கு வெளியே கிளிநொச்சி, வவுனியா போன்ற மாவட்டங்களிலும் வறிய கூலி விவசாயிகள் நிறைய இருந்தார்கள். இவர்களில் கூலி விவசாயிகளாக இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மலையகத்திலிருந்து வந்து அகதிகளாகக் குடியேறிய இந்தியா வம்சாவளி மக்களாவர் இவர்கள் குடாநாட்டில் இருக்கும் கூலி விவசாயிகளை போலல்லாது கணிசமான நிலத்தினை உடமையாகக் கொண்டிருந்தாலும் வாழ்க்கைத் தரத்தில் குடாநாட்டுக் கூலி விவசாயிகளின் நிலையிலேயே இருந்தனர்

இவ்வாறு கிராமிய உழைப்பாளர் சங்கம் சில தவறுகளை விட்ட போதும் வறிய கூலி விவசாயிகளை தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைத்தவர்கள் என்ற வகையிலும் தேசப் போராட்டத்தில் மக்கள் போராட்டம் என்ற கருத்தினை ஊன்றச் செய்தவர்கள் என்ற வகையிலும் வறிய கூலி விவசாயிகளின் அடிப்படைப் பிரச்சினைகளை வெளிக் கொணர்ந்தவர்கள் என்ற வகையிலும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இவர்களுக்கும் ஒரு வரலாற்றுப் பாத்திரம் உண்டு எனக் கூறலாம்.

## அன்ன பூரணா

### இடைக்காலத்திற்குப் பிறகு

மூன்று மாதங்களாகி விட்டன
எதிர்பாராத அந்தப் பனிக்காற்று
நிராதரவான எங்கள் தோட்டத்தில்
கோபமாய்ச் சுழற்றியடித்து

நான் நினைத்தேன்
ஒரு துறவியைப் போல் ஒளிந்து கொள்ள முடியுமென்று
எனது வசந்தகாலக் கவிதைத் தொகுப்பை
பனிக்காலம் பற்றிய கவிதைவரிகள் கொண்டு முடித்துவிட
முடியும் என்று

ஆனால் அங்குமிங்குமாய்க் கொட்டியபனி
மலையாகக் குவிய
என் திட்டம் குலைந்தது
நாங்களோ வசந்தகாலம் நோக்கிப்
பாதி வழி சென்று விட்டோம்

பிறகுதான் தெரிந்தது
தோட்டத்திலிருந்து அந்த இருட்டில்
வெண்பனித்துகள்களின் ஊடாக
பனிக்காலம் ஏன் எட்டிப் பார்த்தது என்று
'புறப்படு' 'புறப்படு' என்று அது
தன் வெளுத்த உதடுகளினூடே
தாழ்ந்த குரலில் என்னை ஏன் அவசரப்படுத்தியது என்று

நானோ என் பென்சில்களைச் சீவியபடி
ஒரு அசட்டுச் சிரிப்புடன்
அனுப்பிவைத்தேன் அதனை

விளக்கெரியும் வைகறைப் பொழுதில்
மேசைக்குமுன் அமர்ந்து
காலாட்டிக் கொண்டிருந்த என்காதில்
அது கொண்டுவந்த செய்தி விழவில்லை


பனிக்காலம் வந்தது,போயிற்று.

பொறீஸ் பஸ்ரேன்க்
தமிழில்:எஸ்.வி.ராஜதுரை வ.கீதா

நன்றி - நூலகத்திட்டம்



## வாசகர் செ(ா)வ்வடி.



## தவறுதான்

சோலைக்கிளியின் கவிதைகள் பற்றிய என் விமர்சனக் குறிப்புகளில் (சரிநிகர் 25) சில அச்சுப் பிழைகள் உள்ளன. அவற்றுள் இரண்டு, சொன்ன விடயத்தை தவறாக விளங்க ஏதுவாகின்றன. ''தமிழில் புதுக் கவிதைக்கு எது அவசியம் இல்லை என்று காட்டுவது பலருக்கு எளிதாக இருந்தது'' என எழுதினேன். எவ்வாறோ அவசியமில்லை என்பது, அவசியம் என்று அச்சாகி விட்டது. ''வரிக்கு வரி வரும் அசைகளின் வேறுபாடு'' என்ற சொற்றொடரில் அசை என்பது அலை என்று வந்துள்ளது.

சரிநிகரில் வரும் விவாதங்களில் இடையிடையே வரும் தனிநபர் மீதான தாக்குதல்கள் இன்று கனதியான விவாதத்துக்கான களங்கள் என அதிகமில்லாத சூழலில் அவசியமா? ''நாலு வார்த்தை எழுதவிடு ''வில் ஜெயபாலனின் கவிதைகள் மீதான விமர்சனக் கடுமை விமர்சகர்களின் அளவுகோல்களின் தன்மையின்பால் பட்டனவாக இருக்கலாம். ஜெயபாலன் பற்றிய தனிப்பட்ட முறையிலான குறிப்புகள் தவிர்த்திருக்கக் கூடியன. (கொழும்பில் கவிஞரது மனைவியும், யாழ்நகரில் அவரது குழந்தையும் இருக்கக் கூடிய சாத்தியப்பாட்டை விமர்சகரால் ஏன் ஏற்க முடியவில்லை? அது இன்றைய சூழலில் மிகவும் சாத்தியமே) அவரது தொகுதியில் பழைய ஜெயபாலனை நினைவூட்டிய கவிதை அது மட்டுமேதான். விமர்சகர் குறிப்பிட்ட வரிகளை விட வேறும் சில அதினின்று பல ஐரோப்பிய சஞ்சிகைகளில் விருப்புடன் எடுத்தாளப்படுவதையும் குறிப்பிடலாம் என நினைக்கிறேன்.

பத்திரிகை மாதமிருமுறை வருவது பற்றி மிக்க மகிழ்ச்சி. வாரம் ஒன்று வரும்காலம் நெருங்க எனது வாழ்த்துக்கள்.

சி. சிவசேகரம்

''தமிழிற் புதுக் கவிதைக்கு எது அவசியம் என்று தேடுவதை விட **எது அவசியம் இல்லையென்று** காட்டுவது பலருக்கும் எளிதாக இருந்தது'' என வரவேண்டியதில் ''தேடுவதை விட எது அவசியம் இல்லை என்று''என்பது விடுபட்டுப் போயுள்ளது. அதே போல் அசை என்பது அலை என்பதாகி விட்டது. தவறு நமதுதான். வருந்துகிறோம். தவிர்க்க முயல்கிறோம்.

ஆ-ர்.

## ராஜதந்திரம் தெரியாதோ?

இலங்கை இந்திய ஒப்பந்தம் ஒரு மேலாதிக்கத் திணிப்பு என்று எழுதியிருந்தீர்கள். நீங்களும் இவ்வாறு எழுதுவதன் மூலம் மிகச் சிறந்த அரசியல் தத்துவார்த்தப் போக்கை கடைப்பிடிப்பதாகக் காட்ட முயல்கிறீர்கள். நீங்கள் நடைமுறைக்கு ஒவ்வாத வறட்டுத் தத்துவங்களை கதைப்பதில் முன்னிற்கிறீர்கள். இப்பொழுது உலகம் மிகவும் சுருங்கி விட்டது. சார்பு என்பது தவிர்க்க முடியாதது. உலகின் ஒரே வல்லரசு அமெரிக்கா உலகைத் தாக்கும் போது சுண்டைக்காய் நாடுகளையும் சேர்த்துக் கொண்டுதான் சண்டையில் இறங்கியது. இந்தியா எமக்காக தமது நலன்களில் சிலவற்றைத் தியாகம் செய்தது. நாமும் எமது முதன்மை நலன்கள் பாதிக்கப்படாமல் தியாகம் செய்வது தவிர்க்க முடியாதது. அவ்வாறு செய்வதன் மூலம் மட்டும் எமது மண்ணையும் மக்களையும் பாதுகாக்க முடியும். இல்லாவிட்டால் முழுமையாக அழிய வேண்டியதுதான். அமெரிக்காவின் ஆதி செவ்விந்தியக் குடிகள் போன்று எமது வரலாறும் இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில் பேசப்படும். புலிகள் பொலிஸ்காரர்களை விடுதலை செய்வதற்கு பெற்றோல் கேட்கின்றனர். இது ஒரு உண்மையை உணர்த்துகின்றது. அவர்கள் எந்த நிலையில் (பலவீன நிலையில்) உள்ளார்கள் என்பதை உணர்த்துகிறது. புலிகள் பல தப்புக் கணக்குகளின் அடிப்படையில் யுத்தத்தைத் தொடங்கினர். தமக்குச் சர்வதேச சமூகம் ஆதரவு தரும் என்று நம்பினர். இலங்கை இராணுவத்தின் பலத்தினையும் குறைத்து மதிப்பிட்டனர். இப்பொழுது உதவிக்கு எவரும் இல்லை. மத்தியஸ்தத்திற்கும் எவரும் இல்லை. மக்கள் வடக்கை விட்டு தப்பி வெளிநாடு செல்ல துடிக்கின்றனர். மக்கள் யுத்தத்தால் களைத்து விட்டனர். மக்கள் ஈழத்தில் நம்பிக்கை இழந்து வருகின்றனர். புலிகள் எவ்வித இராணுவத் தாக்குதல்களுக்கும் தயாராக இல்லை. அவர்கள் யாழ் குடாநாட்டிலும் ஆனையிறவிலும் உள்ள இராணுவத்தினர் வெளியேறாமல் பார்ப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர். இன உரிமைக்கான போராட்டம் இன்று அடிப்படைத் தேவைகளான உணவு, உறையுள் ஆகியவற்றிற்கான போராட்டமாக மாறியுள்ளது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தினை ஏற்று அதன் மூலம் அதனை ஒரு அடிப்படையாக வைத்து, இராஜ தந்திரத்தின் மூலம் நாம் யுத்தத்தால் வெல்லமுடியாத பலவற்றை வென்றிருக்கலாம். உங்களைப் போன்ற வறட்டு வேதாந்திகளும், பிரபாகரன் போன்ற முட்டாள்களும் சேர்ந்து எல்லாவற்றையும் கெடுத்து விட்டனர். உங்களுக்கு இதனால் ஒரு நட்டமும் இல்லை. நீங்கள் உங்கள் வறட்டு வேதாந்தத்தைத் தொடரவேண்டியதுதானே. கிழக்கினை யுத்தத்தின் மூலம் சிங்களவர் கையில் கொடுத்தோம். வடக்கினை யுத்தமின்றி சிங்களவரிடம் கொடுக்கப் போகிறோம். இறுதியில் புலிகள் காட்டிற்கு ஓடி விடுவார்கள். காட்டுக்குள் ஆடம்பர பங்கர்கள் (குளிரூட்டப்பட்ட) ஏற்கனவே தயார். புலிகள் ஓடினால் மக்கள் வெளிநாட்டிற்கு ஓடத்தயார். நீங்கள் இங்கிருந்து கொண்டு இந்திய மேலாதிக்கம் பற்றி தொண்டை கிழிய கத்தத் தயாராக வேண்டியதுதான் மிச்சமுள்ள ஒரேவேலை.

மாலன்
தெகிவளை

## வக்கிரமான விமர்சனம்

விமர்சனம் என்ற பெயரில் என்னைப் பற்றி வக்கிரத்தோடும் உள்நோக்கத்துடனும் எழுதப்பட்ட ஒரு குறிப்பை சரிநிகரில் வெளியிட்டிருந்தீர்கள்.

நான் என்றும் உல்லாசப் பயணி அல்ல. அகதி வாழ்வை விரும்பி ஏற்றவனுமல்ல. ஆனால் எல்லா நிலையிலும் நெருக்கடிகளுள்ளும் வாழ்வை நேசிக்கிறவன்; உலகை விரும்பி ரசிக்கிறவன்.

1987 இலும் பின்னர் 1990 இலும் இயக்கமொன்றின் மரணதண்டனைக் கைதியாக முறையே யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் சிறைப்பட்ட போதும் பின்னர் தேசவிரோதியென கொழும்பில் பொலிஸ் அதிபர் லால் ரட்ணாயக்காவால் கைது செய்யப்பட்ட போதும் எனக்குத் துணையாகவும் எனது மனதுக்கு பலமாகவும் இருந்தது வாழ்வில் விருப்பமும் உலகில் ரசனையும்தான். தங்கள் குரூரமான விமர்சகரை மட்டுமல்ல என்னைக் கைது செய்தவர்களைக் கூட எனது மனநிலை திகைக்க வைத்தது. இந்த மனநிலையில் இருந்துதான் எனது கவிதைகள் வெளிவருகிறது.

''யாழ்நகரில் என் பையன் கொழும்பில் என் பெண்டாட்டி'' என்ற எனது கவிதை வரி பற்றிய குரூரமான கிண்டலே தங்கள் விமர்சகரின் முகத்திரையை கிழிந்துவிட்டது.

பிறந்து மூன்று மாதத்திலிருந்து சரியாக ஒரு வருடங்கள் எனது மகன் யாழ்நகரில் தனது பேரன் பேத்தியுடன் இருந்தான். நான் நோர்வேயில். எனது மனைவி முதலில் தமிழகத்தில் மாணவியாக இருந்தாள் பின் கொழும்பில் ஆசிரியையாக இருந்தாள். இது ஊரறிந்த ரகசியம். இதில் கிண்டலுக்கு எங்கே இடம். தயவு செய்து யாரைப்பற்றியும் வக்கிரமாகவும் உள்நோக்கத்துடனும் எழுதப்படுகிற குறிப்புகளை வெளியிடாதீர்கள்.

வ.ஐ.ச.ஜெயபாலன்

## இருக்க....


சர்வதேச நிறுவனங்களின் சக்கரங்களுக்குள் நசிய விடுவது...

இதற்குள் இடைச் செருகலாக ஒரு விடயம். தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க 'இலங்கை. இந்திய ஒப்பந்த' அடிப்படையில் முயல்வதாக ஒரு கதையையும் கிளப்பிவிட்டுள்ளது இந்தக் கோஷ்டி. எப்படியோ எதைச் செய்யாவிட்டாலும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் உள்ள ஒரே ஒரு விடயத்தை அது கட்டாயம் செய்துதான் ஆகப்போகிறது.

அதுதான் வடக்குகிழக்கை சட்டரீதியில் நிரந்தரமாக பிரிக்கும் விதத்திலான ஒரு 'வாக்கெடுப்பை' நடாத்துவது!

கூடவே இன்னொரு தகவலையும் சேர்த்துக் கொள்வது நல்லது. இந்த ஜே.ஆர் மேட்டுக்குடி ஆட்சியின் போதுதான் தமிழ் மக்களுக்கு எதிரான அனைத்து இனவாதக் கொடுமைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டன. இரண்டு பெரிய (1977,1983) கலவரங்கள் நடந்தன; நூலகம் எரிக்கப்பட்டது! வடக்கு கிழக்கில் குண்டுமாரி பொழியத் தொடங்கியது. எல்லாம்... இந்த மேட்டுக்குடியினரின் மீள்வருகை நிச்சயம் தமிழ்மக்களுக்கு ஆபத்தானது என்பது மட்டும் தெளிவு.

## சேதம் நாசம்



## PEN American Center

ஏறத்தாழ இரண்டு வருடங்களாகச் சிறையிலிருக்கும் செல்வியை விடுதலை செய்யக் கோரியிருக்கிறது பென் (pen) என்கிற அமைப்பு.

கவிஞர்கள், கட்டுரையாளர்கள், நாடகாசிரியர்கள், நாவலாசிரியர்கள், பத்திரிகையாளர்களைக் கொண்ட இவ்வமைப்பு செல்வியின் விடுதலை தொடர்பாகப் புலிகளின் தலைமைத் தளபதி பிரபாகரனுக்கு நேரடியாகக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

எழுதுகிற, பேசுகிற ஜனநாயக உரிமையை மறுத்து செல்வியைக் கைது செய்து வைத்திருக்கிறார்கள் புலிகள்.

அதே உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிற பென் (pen) இப்போது விடுதலை செய்யக் கோரியிருக்கிறது நேரடியாக.

இடைச் செருகலாக புலிகளின் துணுக்காய் முகாம் பற்றி ஒரு குறிப்பு; இந்த முகாமில் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளவர்கள் புலிகளால் உதைக்கப்படும் போது 'கடவுளே' என்று கத்தினால் புலிகள் சொல்வார்களாம், 'கடவுளைக் கூப்பிட்டுப் பிரயோசனம் இல்லை. தலைவருடைய பெயரைச் சொன்னாலாவது சிலவேளை விடுதலை கிடைக்கக் கூடும்' என்று.

சரி,

தலைவருக்கே 'பென்' நேரடியாகக் கடிதம் அனுப்பி வைத்திருக்கிறது. சிலவேளை புலிகள் விட்டாலும் விடுவார்களோ என்று நம்ப யாரும் தயாராகவில்லை என்பது ஒருபுறம் போக மறுபுறத்தில் இந்த ஜனநாயக மறுப்பின் இயங்கியல் அதனுடைய குரல்வளையை நசித்து விடும் என்பதற்கும் அப்பால் தமிழ் மக்களுடைய உரிமைக் குரலையே அறுத்து விடும் என்கிற உண்மையைப் புலிகள் உணர்ந்து கொள்ளப் போகிறார்களா என்ன?

## XIX

•பத்திரிகைகளதும், பத்திரிகையாளர்களதும் சுதந்திரம் தொடர்பாக அக்கறை கொண்டு இயங்கி வரும் ARTICLE 19 குழுவினரைச் சந்தித்து விட்டு வந்த மறுநாள் கிடைத்த தகவல் இது; மட்டக்களப்பில் ஜனாதிபதி இடம்பெயர் சேவையின் போது செய்தி சேகரிக்கச் சென்ற இரண்டு செய்தியாளர்களையும், இரண்டு புகைப்படப்பிடிப்பாளர்களையும் பாதுகாப்பு அதிகாரிகள் அவமதித்திருக்கிறார்கள் என்பது. இடம்பெயர் சேவை இடம் பெற்ற இந்துக் கல்லூரி மண்டபத்தில் பிரவேசிக்க இவர்கள் அனுமதிக்கப்படவில்லை. பதிலாக அவமதிக்கப்பட்டனர்.

பின்னர் 200 யார் தொலைவிலுள்ள இந்துக் கோயில் மண்டபத்திலிருந்து இவர்கள் செய்தி சேகரித்ததாகச் செய்தி.

பிரேமதாசாவின் மறைவிற்குப் பிறகு புதிதாகப் பதவியேற்ற ஜனாதிபதி விஜயதுங்காவும், பிரதமர் ரணிலும் இரு வேறு சந்தர்ப்பங்களிலும் பத்திரிகையாளர்களது சுதந்திரமும், பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும் என்றும், சிறந்த பத்திரிகையாளர்களை உருவாக்க பயிற்சித் திட்டங்களும், சலுகைகளும் வழங்கப்பட உத்தேசித்திருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

கடந்த 24ம் திகதி பிரேமதாசாவிற்குப் பின் 'பத்திரிகைச் சுதந்திரம்' என்கிற தலைப்பில் சுதந்திரப் பத்திரிகையாளர்கள் கருத்தரங்கொன்றை ஒழுங்கு செய்திருந்தனர். கருத்தரங்கில் பேசிய அனைத்துப் பத்திரிகையாளர்களும், பிரேமாவின் மறைவிற்குப் பிறகு பத்திரிகையாளர்களுக்கு ஒன்றும் பெரிதாக சுதந்திரம் எதுவும் கிடைக்கவில்லை என்கிற உண்மையை வலியுறுத்தினார்கள்.

பிரேமா போய் பண்டா வந்திருக்கிறாரே தவிர மற்றப்படி எல்லாம் வழமைப்படி என்பது அவர்களது அபிப்பிராயமாக இருந்தது.

அது அபிப்பிராயமல்ல உண்மை, என்கிறது மட்டக்களப்பில் நடந்த சம்பவம்.

ARTICLE 19ஐச் சேர்ந்தவர்கள் இலங்கையில் தங்கியிருந்து இலங்கையின் பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்படுகின்றனவா என்று அவதானித்துக் கொண்டிருக்கிற போதே பத்திரிகையாளர்களின் அவமதிப்பு நடைபெற்றிருக்கிறது.

இது ஒன்று போதும், இலங்கை அரசு பத்திரிகையாளர்களுக்கு வழங்குகிற சுதந்திரம் பற்றிச் சொல்ல.

அவர்களுக்குத் தேவையானவது முதுகு சொறிகிற முதுகெலும்பற்ற பத்திரிகையாளர் மட்டும்தான்.

அப்படியானவர்களை உருவாக்கப் பயிற்சி கொடுப்பார்கள், அவர்களுக்குச் சலுகை கொடுப்பார்கள். அது பிரேமாவாயிருந்தாலென்ன பிரபாவாயிருந்தாலென்ன பண்டாவாயிருந்தாலென்ன இதில் அதிகாரத்தில் உச்சியிலுள்ள எல்லோரும் ஒன்றுதான்.

நன்றி - நூலகத்திட்டம்



# இருக்க ஒரு கதிரையில்லாத மாகாண சபையில் தமிழர்களுக்கு என்ன இருக்கப் போகிறது?

அரவிந்தன்

*"கடந்த ஐந்தாண்டு காலமாக (13ம் திருத்தச் சட்டப் பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட) அதிகாரங்கள் குறிப்பிட்டபடி வளர்த்தெடுக்கப்படாமலே போயிற்று. உண்மையில் நடந்தது என்னவென்றால் அதிகாரங்கள் பரவலாக்கப்படும் நடைமுறைக்கு நேரெதிராக மேலும் மேலும் மத்திய அரசாங்கத்திடம் குவிக்கப்பட்டே வந்துள்ளன."*

*- சந்திரிகா*



இரண்டாவது மேல் மாகாண சபையின் முதலாவது கூட்டம் அண்மையில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய திருமதி சந்திரிகா குமாரணதுங்க இவ்வாறு பேசினார்.

**''கடந்த ஐந்து ஆண்டு காலமாக (13ம் திருத்தச் சட்டப் பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட) அதிகாரங்கள் குறிப்பிட்டபடி வளர்த்தெடுக்கப்படாமலே போயிற்று. உண்மையில் நடந்தது என்னவென்றால் அதிகாரங்கள் பரவலாக்கப்படும் நடைமுறைக்கு நேரெதிராக மேலும் மேலும் மத்திய அரசாங்கத்திடம் குவிக்கப்பட்டே வந்துள்ளன.''**

கடந்த ஜூலை 29ம் திகதியுடன் ஆறு ஆண்டு பூர்த்திசெய்கிற இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை சட்ட ரீதியில் நடைமுறைக்கு கொண்டுவர உருவாக்கப்பட்டது தான் மேற்கூறப்பட்ட 13ம் திருத்தச் சட்டம் ஆகும். இந்தச் சட்டம் எப்படிப்பட்ட சட்டம் என்பதனை புரிந்து கொள்ள சந்திரிகாவின் ஆறு வருடங்களுக்குப் பின் ஆற்றப்பட்ட உரையின் மேற்கூறிய பகுதி நல்லதோர் உரைகல்லாகும்! இதே கருத்துக்கள் 1987 இலேயே பல சட்டவல்லுனர்களினால் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், அரசினாலும், அரசு மற்றும் இந்திய சார்பு எடுத்திருந்த அரசியல்வாதிகளாலும் புத்திஜீவிகளாலும் **''இது ஒரு தமிழ்க் குறுமினவாதக் குரலின் வெளிப்பாடு''** என்று அலட்சியம் செய்யப்பட்டது. ஆனால் இன்று தென் மாகாண சபையை ஆளும் கட்சியல்லாத இன்னொரு கட்சி கைப்பற்றிஇருப்பதாலோ என்னவோ, இனப் பிரச்சினைக்கு சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்துள்ளன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடந்து வந்த தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தினை மழுங்கடித்து, இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன் வைக்கிறோம் என்று காட்டிக் கொள்ள, இந்திய அரசின் நிர்ப்பந்தத்தில் உருவாக்கப்பட்டது தான் இலங்கை-இந்திய ஒப்பந்தம். இந்த இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட எட்டு மாகாண சபைகள் 13ம் திருத்தச் சட்டப்படி உருவாக்கப்பட்டன இவற்றுக்கான அதிகாரங்கள் இச் சட்டத்தின் படி வரையறை செய்யப்பட்டதுடன், இலங்கை அரசின் ''ஒற்றையாட்சிக்கு உட்பட்ட'' அதிகாரப் பரவலாக்கம் கொண்ட தீர்வாக இது சிலாகித்துப் பேசப்பட்டது.

ஆனால் இந்த மாகாண சபைகள் நடைமுறையில் எத்தகைய அதிகாரங்களும் அற்றே இருந்தன. வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் இதை **''இலங்கையின் மிகப் பெரிய மாகாண சபையின் முதலமைச்சருக்கு இருக்க ஒரு கதிரையில்லை''** என்று நகைச்சுவையாகத் தெரிவித்திருந்தார். வடக்கு கிழக்கு மாகாண சபைகள் தவிர்ந்த மற்றெல்லா மாகாண சபைகளும் யூ.என்.பியின் கையில் இருந்ததால் இச்சபைகளுக்கு அதிகாரம் இல்லை என்பது வெளித்தெரிய வரவில்லை.

**உண்மையில், இந்த 13ம் திருத்தச் சட்டம் பற்றி அப்போது கருத்துத்** தெரிவித்த சட்ட அறிஞர்கள் இம் மாகாண சபைகட்கு எந்த 'சுயாதீனமும்' கிடையாது என்று கூறி பின்வரும் விடயங்களை சுட்டிக் காட்டியிருந்தனர்.

1. 13ம் திருத்தச் சட்டம் வழங்கும் மாகாண சபைகளின் 'நிறைவேற்று அதிகாரம்' மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சரிடம் இல்லை. அது ஆளுநரிடம் மட்டுமே இருக்கிறது. முதலமைச்சர் ஆளுநரின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவராகவே உள்ளார். உண்மையில் சட்டத்தின் 154F-1 பிரிவு இப்படித்தான் கூறுகிறது. 'முதலமைச்சருடன் கூடிய நான்கு அமைச்சர்களுக்கு மேற்படாத அமைச்சர்களைக் கொண்ட சபை ஆளுநருக்கு **அவருடைய** கடமைகளைச் செய்ய உதவியும் ஆலோசனைகளும் வழங்கும்'.

2. ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவர். அவர் மாகாண சபையின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.. ஜனாதிபதியினதும், அவரது அரசியல் கட்சியினது விருப்புக்கும் ஏற்ப நியமிக்கப்படும் இந்த ஆளுநரை நியமிப்பது, கட்டுப்படுத்துவது, பதவி நீக்கம் செய்வது ஆகிய அனைத்து அதிகாரங்களும் ஜனாதிபதிக்கே உண்டு. உண்மையில் ஆளுநர் என்பவர் மாகாண எல்லைக்குள் ஜனாதிபதியின் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு அரச அதிகாரியே. இது முன்பிருந்த நிலைமையில் எம்மாற்றத்தையும் தரவில்லை. ஒரு மாகாண சபையும், சில மந்திரிகளும் உருவாக்கப்பட்டதைத் தவிர!

3. முதலமைச்சரும் மந்திரிகளும் வழங்கும் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தவோ, கேட்கவோ வேண்டுமென்று அவசியம் அவருக்கு இல்லை. ஆனால் முதலமைச்சர்களும், மந்திரிகளும் நடாத்தும் ஒவ்வொரு மந்திரி சபைக் கூட்டத்தின் அனைத்து முடிவுகளும் ஆளுநருக்கு அறிவிக்கப்பட்டே ஆகவேண்டும்-இது சுத்த ஜனநாயக விரோதத் தன்மை வாய்ந்த ஒரு சரத்தாகும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒருவருக்கு எல்லா முடிவுகளையும் தெரிவிக்க வேண்டும். ஆனால் அவர் மக்களுக்கு தமது முடிவுக்கான காரணங்களை தெரிவிக்க வேண்டியதில்லை.

4. 13ம் திருத்தச் சட்டம், மாகாணங்களுக்கான மானியங்களை தீர்மானிக்கும் பொறுப்பை மத்திய அரசிடமே விட்டு வைக்கிறது. சரியாகச் சொன்னால் ஜனாதிபதியே இவற்றைத் தீர்மானிக்கிறார் நிதிக் கமிஷன் ஒன்று- ஜனாதிபதியின் விருப்பப்படி மட்டுமே இதனால் இயங்க முடியும்- மாகாண சபைக்கான நிதியினைப் பரிந்துரை செய்யும். இவற்றில் எதை ஒதுக்கீடு செய்வதென்பதை தன் விருப்பப்படி ஜனாதிபதி தீர்மானிப்பார். மாகாண சபைக்கும் வரி அறவிடல் அவற்றைச் செலவு செய்தல் என்பது தொடர்பாக ஆளுநரின் முடிவே தீர்மானகரமானது. அவரது அனுமதி இன்றி ஒரு சதம் கூட செலவழிக்கப்பட முடியாது. ஆக மாகாண சபைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மந்திரிகட்கு எதுவித அதிகாரங்களும் இல்லை என்றாகிறது.

5. பிராந்திய பாதுகாப்புக்கான மாகாண உதவிப் பொலிஸ் மாஅதிபர் (D.I.G.)ஒருவர் முதலமைச்சரின் கீழ் கடமையாற்றுவாரென 13வது திருத்தச் சட்டம் சொல்கிறது. ஆனால் இவரது நியமனம், மத்திய அரசின் கட்டளைப்படி பொலிஸ்மாஅதிபராலேயே(I.G.P.) தீர்மானிக்கப்படுகிறது. அவர் மீதான உத்தியோக பூர்வ கட்டுப்பாடு (அவரது பதவி உயர்வு, பதவிக் காலம், ஒழுக்கம்(discipline) போன்றவை) பொலிஸ் மா அதிபரிடமே இருக்கும். ஆக D.I.G. மீதான உண்மையான கட்டுப்பாடு மத்திய அரசிடம் போய்விடுகிறது. (உண்மையில் எம்.பிக்களுக்கும் அமைச்சர்களுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை வழங்குவது போல இது ஆகிவிடுகிறது!)

6. காணி விடயம் தொடர்பாக மாகாண சபைகளிடம் எந்த அதிகாரங்களும் இல்லை. காணிப் பகிர்வு, பங்கீடு தொடர்பாக மாகாண சபைகள் எத்தகைய் அதிகாரமும் கொண்டிருக்கவில்லை. (குடியேற்றங்கள் பற்றி மூச்சுக் கூட விடமுடியாது!) தப்பித் தவறி ஏதாவது தீர்மானத்தை மாகாண சபை போடும் பட்சத்தில் அதைப் பாராளுமன்றத் தீர்மானம் ஒன்றின் மூலம் கட்டுப்படுத்திவிட முடியும்.

ஆக, மொத்தத்தில் மாகாண சபைகள், மாகாணங்களில் வாழும் மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்கியிருப்பதாக சொல்வது உண்மையில் ஒரு ஏமாற்று என்று புரிகிறது. இது ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் சிறப்பாக மையப்படுத்த -முதலமைச்சர் உள்ளிட்ட மாகாண சபையின் முழுமையான ஆதரவுடன் மையப்படுத்த- மட்டுமே உதவுகிறது. ஆளுநரும், ஜனாதிபதியின் பிற அதிகாரிகளும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களை விட அதிகாரம் படைத்தவர்களாக உள்ளனர். இந்த நிலையில், ஒரு மத்திய அரசுக்கு எதிரான ஒரு மாற்றுக் கட்சி ஏதாவது ஒரு மாகாண சபையில் அதிகாரத்துக்கு வருமானால் அதனால் எந்தவொரு வேலையையும் செய்ய முடியாதளவுக்கு தடுக்க அரசுக்கு வாய்ப்பு இருக்கிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால், இப்படிப்பட்ட ஒரு நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினையை இந்த 13ம் திருத்தச் சட்டம்மூலம் தீர்க்கலாம் என்று கூறப்பட்டு வருவதுதான். சிங்களப் பௌத்த அரசுகளுக்கும், தமிழ்த் தேசியத்தின் போராட்டத்திற்கும் இடையே சமாதானத்தை இந்தவொரு உப்புச்சப்பற்ற அமைப்பு வழங்கும் என்று யார்தான் நம்புவார்கள்? **இலங்கை அரசின் கடந்த கால வரலாற்றின் காரணமாக முற்று முழுதான அவ நம்பிக்கைக்குள்ளாகியிருக்கும் தமிழ் மக்கள், ஆளுநருக்கு கட்டற்ற அதிகாரம் வழங்கும் மாகாண சபையை எந்த நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது?** அவர்களின் பிரதான பிரச்சினையான குடியேற்றப்பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் வழங்க முடியாத இம் மாகாண சபையால் யாருக்கு என்ன பயன்?

இப்போது சந்திரிகா முதல் முதலாக நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளார். அவர் மேல் மாகாண சபையின் அதி கூடிய வாக்குகளால் மக்கள் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டிருக்கலாம்; ஆனால் அரசியல் சட்டம் அவரை விட ஆளுநருக்கே அதிகாரத்தை அதிகமாக வழங்கியுள்ளது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதாவது இது பற்றி பேசுவதற்காக நாம் அவருக்கு நன்றி கூறுவோம்! அதே கூட்டத்தில் அவர் கூறிய வார்த்தைகளை இறுதியாகக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

*இலங்கை அரசின் கடந்த கால வரலாற்றின் காரணமாக முற்று முழுதான அவநம்பிக்கைக்குள்ளாகியிருக்கும் தமிழ் மக்கள் ஆளுநருக்குக் கட்டற்ற அதிகாரம் வழங்கும் மாகாண சபையை எந்த நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது?*

'' இந்த நாட்டின் அதிகாரப் பரவலாக்கலின் வரலாற்றில் ஒரு தீர்மானகரமான காலகட்டத்துக்கு நாம் வந்துள்ளோம். ஆட்சியிலுள்ளதற்கு மாறான கட்சியினைக் கொண்டவர்களது மாகாண சபை ஒன்றை நாம் அமைத்துள்ளோம். நாம் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜனநாயக ஸ்தாபனங்களின் பலத்தை நிரூபிக்கத் திடசங்கற்பம் கொள்வோமாக!

ஆம் எந்த ஜனநாயக ரீதியான அதிகாரமுமற்ற மாகாண சபையை புரிந்து கொண்டு அதன் அதிகாரங்களுக்காகப் போராட வேண்டுமென்ற விதியை ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகாவது புரிந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியானதுதான்!

*''இலங்கையின் மிகப் பெரிய மாகாண சபையின் முதலமைச்சருக்கு இருக்க ஒரு கதிரை இல்லை''*

*--வரதராஜப்பெருமாள்.*

நன்றி - நூலகத்திட்டம்



# பிரேமதாசா எதிர்ப்பும் மேட்டுக்குடி அரசியலும்

**-சஞ்ஜித்-**

மே முதல் திகதி முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச ஆமர்வீதியில் வைத்து கொல்லப்பட்டதை அடுத்து அரசியல் வட்டாரங்களில் பல சுவையான சம்பவங்கள் நடந்துள்ளன. அவரது மரணத்திற்காக காத்துக் கொண்டிருந்தது போல அவசர அவசரமாக புதிய ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க பதவியேற்றார். அவரது புகழ் பெற்ற கம்உதாவ கொண்டாட்டங்களை அவர் இருந்த காலமெல்லாம், அவர் சொன்னபடி தலையாட்டிக் கொண்டிருப்பவர் எனப் பரவலாக அறியப்பட்டவரான புதிய ஜனாதிபதி, ''இனி நடக்காது, இத்தகைய தமாசாக்கள் இனி இல்லை'' என்று அறிவித்தார். அமைச்சர்களை 'சுதந்திரமாக' இயங்க அனுமதிப்பதாகத் தெரிவித்தார்; ஒரு தனிமனிதரிடம் இவ்வளவு அதிகாரங்கள் குவிந்திருப்பது அவசியமில்லை என்று தான் கருதுவதாகவும் அவற்றைப் பகிர்ந்து கொள்வதற்காக அரசியல் யாப்பில் 'புனருத்தாரணம்' கூட செய்யலாம் என்றும் கூறினார். இதே கருத்துக்களைக் கூறிய லலித், காமினி, பிரேமச்சந்திரா கூட்டை கட்சியை விட்டு வெளியேற்றிய போது, அதே கட்சியில் பிரதம மந்திரிப் பதவியில் இருந்த இன்றைய ஜனாதிபதியின் இந்த அறிவிப்புக்கள் ஒவ்வொன்றும் யூ.என்.பிக்குள் உள்ளார இருந்திருக்கக் கூடிய ஒரு எதிர்க் கோஷ்டியின் பலத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. பிரேமதாசாவுக்கு எதிராக உள்ளூரப் பலம் பெற்று வந்த இந்தக் கோஷ்டி, பிரேமதாசாவின் மறைவை எதிர்பார்த்துக் காத்திருந்ததோ என்று சொல்லுமளவுக்கு வேகமாக இன்னமும் பல நிகழ்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட அரைப்பங்குக்கு மேல் பூர்த்தியாகி விட்டிருந்த கம்உதாவ கண்காட்சி வேலைகள் பாதியில் நிறுத்தப்பட்டன; பிரேமதாசாவின் நற்பெயரினை களங்கப்படுத்தியவர்கள் என்றும், அவரை புத்தி பேதலித்தவர், அதிகார வெறியர் என்றெல்லாம் கூறி பதவியிலிருந்து இறக்க ஒழுக்க வழுவுரைப் பிரேரணையைத் தயார் செய்தவர்கள் என்றும் கூறப்பட்ட டி.யூ.என்.எஃப் கட்சியினருடன் கூட்டுச் சேர்வதற்கான முயற்சிகள் வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன.

நீதிமன்றத்தால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்தவர் முன்னாள் டி.ஐ.ஜி உடுகம்பொல. களவாக நாட்டை விட்டுத் தப்பியோடியவர். ஜனாதிபதி பிரேமதாசாவின் காரணமாகத் தான் நீதிமன்றத்திற்கு வருவதால் தனது உயிருக்கு ஆபத்து வரும் என்று கூறி நீதிமன்றத்தின் முன் வர மறுத்து அரசின் மீது பல பயங்கர குற்றச்சாட்டுக்களை சுமத்தியவர் இவர் எந்தவிதமான பயமுமின்றி விமான மூலம் நாடு திரும்பியுள்ளார். அதன் பிறகு அரசு அவர்மீது சுமத்திய குற்றச்சாட்டுக்களையும் வழக்கையும் வாபஸ் வாங்கிக் கொள்கிறது...

இப்படித் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கும் விடயங்களையும், பிரேமதாசாவின் வலதுகரமென நம்பப்பட்டவரும் யூ.என்.பியின் செயலாளருமான சிறிசேன குரே, மிகிந்தலை கம்உதாவ கொண்டாட்டத்தின் போது கட்சித் தலைமைக்கு எதிராக முன்வைத்த தாக்குதலையும் இணைத்துப் பார்க்கும் போது யூ.என்.பிக்குள் பிரேமதாசாவுக்கு எதிராக முற்றியிருந்த எதிர்ப்பினை இனங்காணக்கூடியதாகவுள்ளது. பிரேமதாசாவின் தனிப்பட்ட குணங்கள், அவரது அதிகாரவெறி, **அவரது கல்விப்** பின்னணி, அவரது **சாதி போன்ற** பலவற்றினைக் காரணமாக வைத்து அவருக்கு எதிரான ஒரு அணி மிகவும் பலமாகவே திரட்டப்பட்டிருக்கிறது. கிராமங்களில் அவரது மலினத்துவ திட்டங்கள் காரணமாக அவருக்கிருந்த செல்வாக்கும், கட்சி இயந்திரத்தின் மீது அவர் வைத்திருந்த இறுக்கமான கட்டுப்பாடும் காரணமாக இந்த அணி தெளிவாக தன்னை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. இப்போது அவர் இல்லாது போனதும், தமது தலைமையை உறுதிப்படுத்திக் கொண்டுள்ள இந்த அணி, தமக்கு எதிராக வரக்கூடிய அனைத்து அம்சங்களையும் மௌனமாக்கிவிட தீவிரமாக முயன்று வருகிறது. பிரேமதாச அணியினரை ஒதுக்கி, பழைய ஜே.ஆர் வழிவந்த மேட்டுக்குடி சார்பு அணியை பலமாக்கும் வேலைகள் நடக்கின்றன. இந்த மேட்டுக்குடியின் கடந்தகால நடவடிக்கைகள் வெளியில் வராமலிருப்பதற்காக திட்டமிட்ட வகையில் அனைத்து எதிர்ப்புக்களுடனும் சமரச முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல், முன்னாள் மேல் மாகாணசபை முதலமைச்சரான - தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர்- சுசில் முனசிங்க, கட்சிச் செயலாளர் சிறிசேனகுரே வெளிநாடு போயுள்ள நிலையில், உப செயலாளர் என்று ஒரு புதிய பதவி கொடுக்கப்பட்டு கட்சியின் முக்கிய மட்டத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளார். தவிரவும், கடந்த கால பிரேமதாசாவின் அரசியலை மறைமுகமாக அவர் விமர்சிக்கவும் தொடங்கியுள்ளார். இந்த சுசில் முனசிங்க, ஜே.ஆர் அரசின் போது முக்கிய இடத்திற்கு வந்த மேட்டுக்குடிப், பணக்கார அரசியல் வாதி என்பது வெளிப்படையான ஒரு உண்மையாகும்! இவர் கட்சிக்குள் உயர்த்தப்படுவது, பிரேமதாச விசுவாசியும் கட்சியின் சக்தி வாய்ந்த செயலாளர் பதவியை வகிப்பவருமான சிறிசேன குரேயை ஓரங்கட்டி பிரேமதாசா அணிக்கு இறுதி ஆப்பையும் செருகும் நடவடிக்கையோ எனச் சந்தேகிக்க வைக்கிறது. தேசிய அரசாங்கம் என்ற போர்வையின் கீழ் அனைத்து உண்மைகளையும் மூடி மறைக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

உண்மையில் ஜே.ஆருக்குப் பிறகு யாரை ஜனாதிபதி வேட்பாளர் ஆக்குவது என்ற கேள்வி எழுந்த போது இந்த யூ.என்.பியின் **மேட்டுக்குடி** அணிக்குப் பிரேமதா**சாவை** விட விருப்பம் இருக்கவில்லை. மிக நெருக்கடியான நிலையில் அவரை ஒரு வேண்டாத வேட்பாளராக நிறுத்தினார்கள். கட்சிக்குள் அவருக்கு இருந்த செல்வாக்கும் அவரது உழைப்பும் தவிர்க்க முடியாமல் அவர்களை இவ்வாறு செய்ய நிர்ப்பந்தித்த காரணிகள் ஆகும். ஆனால் பிரேமதாசா வெற்றி பெற்றார். அவர் வெற்றி பெற்றதும், தனக்கு எதிரான அனைத்து சக்திகளையும் வேட்டையாடினார் தான் ஒரு பியோனாக நடாத்தப்பட்டதாக பகிரங்கமாக கூறினார். (கட்சி அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை) தனக்கென ஒரு அணியை பலமாக உருவாக்கிக் கொண்டார். ஜனாதிபதி பதவி தந்த அதிகாரம் காரணமாக மேட்டுக்குடியினர் அவரை விழுத்த முடியாமல் இருந்தது. ஆனால், இப்போது அவரது மரணத்திற்குப் பின் இந்த மேட்டுக்குடி தீவிரமாக தன்னை புனரமைக்கத் தொடங்கியுள்ளது. வெகுவிரைவில் ஸ்டாலினைத் தூற்றிய கம்யூனிஸ்ட் கட்சியைப் போல பிரேமதாசாவை யூ.என்.பி சந்தி சிரிக்கத் தூற்றத்தான் போகிறது. அதற்கான தயாரிப்பில் அது இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அடுத்த ஜனாதிபதி தேர்தல் வரை அவசரப்படக் கூடாது என்று கருகிறது போலும்!


எப்படியோ பிரேமதாசா கொலை பற்றிய விசாரணைகள், அவரது மாளிகையில் பெருமளவு பணம் இருந்ததாகக் கூறப்பட்ட - பாராளுமன்றத்திலேயே எழுப்பப்பட்ட விடயம் என்பன கவனிப்பாரற்று கிடப்பில் போடப்பட்டு விட்டன.

ஆக, இந்த அணியின் இலக்குதான் என்ன?

யூ.என்.பியினதும், அரசினதும் அனைத்து நடவடிக்கைகளையும் அதனால் அதற்கு ஏற்பட்டுள்ள அவப்பேரையும் பிரேமதாசா என்ற நபரது தலையில் கட்டிவிடுவது; தேசிய அரசாங்கம் என்ற பெயரால் இந்த அரசுக்கு ஜனநாயகத் தன்மை வந்து விட்டதாக நம்ப வைப்பது. எல்லாவிதமான பதவியாசையும், புகழ்வெறியும் கொண்ட, சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி ஜனநாயகம் பற்றிப் பிதற்றுகின்ற அரசியற் கட்சிகளையும் நபர்களையும் இணைப்பதன் மூலம் இதைக் காரியமாக்குவது. இந்த ஊரை ஏய்க்கும் நடவடிக்கையின் பின்னணியில், இலங்கையை இன்னுமின்னும் அதிகளவில் இராட்சத

→10

# திருகோணமலை: பறிபோகிறது




**-அதிகபட்சன்**

மடத்தடிச் சந்தி.

இது திருகோணமலைப் பட்டினமும் சூழலும் பிரதேச எல்லைக்குட்பட்ட முக்கியமான ஐந்து வீதிகள் ஒருங்கே சந்திக்கின்ற இடத்திற்குப் பெயர். இச்சந்தியின் வடகரை வீதி வரையிலான சுற்றுப்புறங்களில் தீவிரப்படுத்தப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றத்துடன் இப்போதிருக்கிற யுத்த நெருக்கடியும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வின்மையும் தொடருமானால் மடத்தடிச்சந்தி என்பது 'மடத்தடி ஹந்திய' எனத் திரிபுபடுத்தப்பட்டு இந்த இடம் ஒரு சிங்களக் கடைத்தெருவாக மாறினாற் கூட ஆச்சிரியப்படுவதற்கில்லை. இங்கிருந்து கூப்பிடுகிற தொலைவில் தான் ஒரு இராணுவமுகாம், பொலிஸ்நிலையம் அத்துடன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழக செயலகம், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் முகாம் என்பன

சந்தியிலிருந்து வடகரை வீதியை நோக்கி நடக்க ஆரம்பிப்பதற்கு முன்னர் வலப்புறமாக சனீஸ்வரன் கோயில். இவ்வாறான பெயரில் இலங்கையில் திருகோணமலையில் மட்டுமே ஒரு கோயில் உள்ளதாகக் கூறப்படுகிறது. இடப்பக்கம் சுழலவிடுகிற பார்வையில் சட்டென நமது கவனத்தை ஈர்ப்பவை மாரியம்மன் கோயிலும் வீரகத்திப் பிள்ளையார் கோயிலும். இக்கோயிலுக்குச் சொந்தமான காணிகளே தற்போது சிங்களக் குடியேற்றத்திற்காக அபகரிக்கப்பட்டு வருகிறது. புகையிரத நிலைய ஊழியர் விடுதிகளுக்குப் பின்னாலுள்ள முடிக்குரிய காணிகளிலும் பல குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. இப்பகுதியில் இருந்து மட்டிக்கழிவரை எந்தவொரு தமிழ்க்குடிமகனதும் சாயலை எம்மால் அவதானிக்கமுடியாது.

வடகரைவீதியை வந்து சேர்கிற போது ஒரு பெரிய கத்தோலிக்க தேவாலயம். எதிர்த்திசையில் இரண்டாம் உலகமகாயுத்தத்தில் இறந்தவர்களின் யுத்தக்கல்லறைகள். தேவாலயத்திற்கு அருகாமையாக முஸ்லீம்களின் மையவாடி. இன்னும் சில மாதங்களில் இம்மையாவடி சிங்களவர்களால் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டு விடும். 'தேவாலயத்தில் இருந்து வலப்புறமாக வடகரைவீதிக்கடைத் தெருவை' நோக்கி நடக்கையில் 348ம் இலக்க வீட்டை அவதானிக்கிறோம். இது ராஜு என்கிற தமிழருக்குச் சொந்தமான வீடு. ஒரு சிங்களக் குடும்பத்தினால் உரிமை கொண்டாடப்படுகிறது. வலப்புறமாகத் திரும்பி புதிய கட்டிடங்கள் தலைநிமிர்கிற ராஜகீய சிங்கள வித்தியாலயத்தின் சுற்றுமதில்களின் மேலாக நோட்டம் விடுகையில் நமக்கு பெரும் அதிர்ச்சி காத்திருக்கிறது. உள்ளேயிருந்த வைரவர் கோயிலையும் கத்தோலிக்க தேவாலயத்தையும் காணோம். விசாரிக்க நினைத்து வீரநகரைச் சேர்ந்த ஒரு தெரிந்த நண்பரிடம் பேச்சுக் கொடுத்த போது அவை இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு விட்டதை உறுதிப்படுத்திய அவர், இன்னொரு விடயத்தையும் எமது கவனத்துக்குக் கொண்டு வந்தார். வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் ''கோலா'' என்று அழைக்கப்படும் (flying fish)மீனினம் ஏராளமாகப் பிடிக்கப்படும் கடலெல்லை தமிழர்களுக்குரியது. ஆனால் புல்மோட்டை-கல்லாறு எனும் இடத்திலிருந்து படகுகளில் வரும் சிங்கள மீனவர்களால் இக் கடல் பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதை விபரித்த நண்பர் வயிற்றுப் பிழைப்பிலும் கை வைக்கத் தொடங்கி விட்டார்கள் எனக் கூறிக் கொண்டு பெருமூச்சுடன் நகர்ந்தார்.

வடகரை வீதியில் நடந்து கடைத்தெருவையும் மணிக்கூட்டுக் கோபுரத்தையும் கடந்து செல்கையில் கலாசார மத்திய நிலையமாக இருந்து பின்னாட்களில் இந்துக் கல்லூரிக்கு சொந்தமாயிருக்க வேண்டிய பிரட்றிக் கோட்டையோடு ஒன்றிய பிரதேசம் சங்கமித்த பௌத்த விகாரையாக மாறியிருப்பதை எதிர்கொள்கிறோம். அதனுடன் சேர்ந்த காணி அப்போதிருந்த அரச அதிபர் திஸ்ஸ தெய்வேந்திர வினால் சிங்கள உயர்ந்தபாடு கரைவலை மீன்பிடிச் சங்கத்திற்கு ஒதுக்கப்பட்டதும் பழைய விடயமாக இருப்பினும், அங்கிருந்து மீன் சந்தையை நோக்கி நடந்து வருகையில் வெறுமையாக இருந்த காணிகளில் 50க்கு மேற்பட்ட குடிசைகள் முளைத்து பாதுகாப்புப் பிரதேசம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது புதிய விடயமே.

அத்துடன் குடித்தொகை மதிப்பீட்டுப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 1981ம்ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டின்படி சிங்களவர்கள் 21,168 ஆகவும் (இலங்கைத் தமிழர் 39,560, இந்தியத் தமிழர் 3006, முஸ்லீம்கள் 6804எனத்) தமிழ் பேசும் மக்களை 49,370 ஆகவும் சனத்தொகையைக் கொண்ட திருகோணமலைப் பட்டினத்தையும், சூழலையும், பிரதேச செயலகம் சிங்களப் பிரிவு, தமிழ்ப் பிரிவு என இரண்டாகப் பிரிக்கப்படவிருக்கும் பிந்திய செய்தியும் தமிழ் பேசும் மக்களையும், தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தையும் நேசிக்கிற ஒவ்வொரு மனிதனின் இதயத் துடிப்பையும் நிறுத்திப் பார்க்கிற விடயங்கள்.

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

## மலையகத்தின் வெளிச்சம் வெளியே தெரிந்து விட்டது

**93** ஜூலை மாதம் 11ம் 18ம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியான பாடசாலைக்களுக்கிடையிலான தமிழ்த் தின விழாப் போட்டிகளில் அட்டன் பகுதியைச் சேர்ந்த பொகவந்தலாவை சாந்த மரியாள் மகா வித்தியாலய மாணவர்கள் மேடையேற்றிய ''வெளிச்சம் வெளியே இல்லை'' என்ற நாடகம் முதலாம் இடத்தை வென்றும் அதற்கான பரிசைக் கொடுக்க மறுத்துள்ள கல்வித் திணைக்கள அமைப்பாளர்களின் செயல் மலையகமெங்கும் பெரும் கண்டனங்களுக்கு உள்ளாயிருக்கின்றது.

இந்த நாடகம் ஒரு குறியீட்டு நாடகம் என்பதோடு மலையகத் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களின் வாழ்க்கை முறையை சித்தரிப்பதாக அமைந்ததொன்றாகும். இந்த நாடகம் அட்டன் பிரதேச மட்டத்திலான போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று மத்திய மாகாண மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

நாடகத்தில் தோட்டத்துரையைக் கண்ட தொழிலாளி தொடை நடுங்கி நிற்கும் காட்சியொன்றை விமர்சனம் செய்த இவ்விழாவுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட தொண்டமான் ''இது ஐம்பது வருடங்களுக்கு முன்பிருந்த நிலை. இப்போது தோட்டத் தொழிலாளியை நாற்காலியில் அமர்த்தி தொழிலாளியுடன் தேநீர் அருந்தும் நிலை காணப்படுகின்ற காலம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து அத்துறையில் நிலவிய வர்க்க ஒடுக்குமுறையின் தன்மையில் வேறுபாடுகள் காணப்படுவது உண்மைதான். எனினும், இவர் கூறும் அளவுக்கு முன்னேற்றமடைந்த நிலமைகளைக் கண்டவர்கள் எவரும் இல்லை. இ.தொ.கா.வின் தலைவரான சௌமியமூர்த்தி தொண்டமானோ தன்னை வாழ வைத்துக் கொண்டிருக்கும் இந்த தொழிலாளர்களை தனது வீட்டில் தனக்கு சரிநிகர் சமமாக இருத்தி ஒன்றாகத் தேநீர் அருந்தாத நிலையில் தோட்டத் துரைமார் எப்படி அப்படிச் செய்வார்கள்?

இந்த நாடகத்தில் தொழிலாளர் அடக்குமுறைகள் ஓரளவுக்கு சற்று மிகைப்படுத்தியே காட்டப்பட்டிருந்தன என்றாலும், இது ஒரு குறியீட்டு நாடகம் என்பதால் பிரச்சினைகளை சற்று ஆழமாகவே எடுத்துக் காட்டுவது தான் நாடக மரபு என இந்நாடகத்தைத் தயாரித்தளித்த அப்பாடசாலையின் ஆசிரியரான திரு.எஸ்.ஆர். நிஸார் கூறுகின்றார்.

இந்த நாடகம் கொழும்பில் 17ம், 18ம் திகதிகளில் நடைபெறவிருந்த அகில இலங்கை தமிழ்த் தின விழாப் போட்டிகளில் பங்கு பெறற்த் தகுதி படைந்திருந்தாலும், இந் நாடகத்தை கொழும்புக்குக் கொண்டு செல்வதைக் தடுப்பதற்கான முயற்சிகளில் ஜனநாயகவாதிகள் என தமக்கு நாமம் சூட்டிக் கொண்ட இ.தொ.காங்கிரஸ் அரசியல்வாதிகள் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இதன் ஒரு நடவடிக்கையாக அட்டனிலுள்ள அம்பகமுவ கல்வித் காரியாலயத்தின் பிரதேச கல்விப் பணிப்பாளரான அலதெனியா, 1993- 07- 14ம் திகதியிட்டு, வித்தியாலய அதிபருக்கு சிங்கள மொழியில் அனுப்பிய தனது கடிதத்தில் பின்வரும் பொருள்படுமாறு குறிப்பிட்டிருந்தார். ''மத்திய மாகாண தமிழ் மொழித்தினப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற உங்களது வித்தியாலய ''வெளிச்சம் வெளியே இல்லை'' என்ற நாடகத்தை மத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளரின் விசேட கட்டளைப் படி. அகில இலங்கை ரீதியிலான போட்டிகளில் பங்குபற்றாதிருக்கும் படி இத்தால் அறியத் தருகிறேன்''.

**மலைதான்**

இ.தொ.கா.வினர் ஐந்து வருடகாலமாக மத்திய மாகாணக் கல்வி அமைச்சைத் தன்வசப்படுத்தி வைத்திருந்தும் கூட அட்டன் போன்ற தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்திலுள்ள கல்விக் காரியாலத்திலிருந்து ஒரு தமிழ்ப் பாடசாலை அதிபருக்கு அதுவும் தமிழ் மொழித்தின விழா தொடர்பாகத் தமிழ் மொழியில் கடிதமொன்றைக் கூட எழுதியனுப்பப்படுவதை உறுதி செய்யக் கூட அருகதையற்ற இவர்களின் நிலமையிலிருந்து, இவர்கள் பெற்றுக் கொடுத்ததாகப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் மலையக மக்களின் உரிமைகளின் தன்மை மிகத் தெளிவாகத் தெரிகின்றது என்பது வேறு விடயம்.

இதேவேளை அட்டன் பகுதியில் நடைபெற்ற ஒரு அரச வைபவத்திற்கு வருகை தந்த மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சரான சதாசிவத்தை பாடசாலை அபிவிருத்திக் குழுவினரும், ஆசிரியர்களும் சந்தித்து, மிகவும் பணிவாகத் தமது பாடசாலையின் நாடகம் கொழும்பில் நடைபெறவிருக்கும் அகில இலங்கைப் போட்டியில் பங்குபற்ற அனுமதி தரவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்கள். ஆனால் புதிதாக அமைச்சரான மாண்பிகு அமைச்சரோ மிகவும் சீற்றம் கொண்டு அங்கு சென்ற ஆசிரியர்களைப் பார்த்து ''**உங்களது தொழில்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் இந்த நாடகத்தை கொழும்புக்குக் கொண்டு போகும் முடிவைக் கைவிடுங்கள். இதுதான் நான் இறுதியாகக் கூறுவது. இதற்கு மேல் ஐயாவிடம் (தொண்டமானிடம்) தான் பேச வேண்டும்**'' எனக் கூறியுள்ளார்.

மீண்டும் ஒருமுறை இந்தப் பாடசாலை அபிவிருத்திச் சபையினர் இந்த அமைச்சரை நுவரெலியாவிலுள்ள இ.தொ.கா காரியாலயத்தில் சந்தித்த போதும் தமது கோரிக்கைகளுக்கான சாதகமான முடிவுகள் எதையும் பெற முடியாமல் போய் விட்டது.

இதற்கிடையில் கண்டியிலுள்ள மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் அட்டன் தோட்டக் கல்வி உதவிப்பணிப்பாளருடன் இந்தப் பாடசாலைக்குச் சென்று அந்நாடகத்தின் சில பகுதிகளை மாற்றும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார். அவ்வேண்டுகோளை அப்பாடசாலை அதிபர்களும், மாணவர்களும் ஏற்றுக் கொண்டாலும், அந்த நாடகம் கொழும்பில் நடைபெறவிருக்கும் போட்டிகளில் பங்குபற்றுவது தொடர்பான ஒரு முடிவு அன்றைக்கு வழங்கப்படவில்லை.

இந்நிலையில் கொழும்பில் போட்டிகள் நடைபெறவிருந்த தினத்திற்கு முதல் நாள் பாடசாலை அபிவிருத்திச் சபையினர் கொழும்பிற்குச் சென்று அங்கிருந்த விழா அமைப்புக் குழுவினரை சந்தித்துள்ளனர். அப்போது இந்த நாடகம் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருப்பதுவும், அது தடை செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பான எந்தவிதமான அறித்தலும் இந்த அமைப்புக் குழுவிற்கு வழங்கப்படாமையையும் தெரிந்து கொள்ள முடிந்தது. அந்தத் தகவல்களை அறிந்த பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் உடனடியாகக் கொழும்பை சென்றடைந்து அங்கு அகில இலங்கை ரீதியில் போட்டியிட்டு முதலாம் இடத்தை வென்று விட்டனர்.

தோட்டப்புற பாடசாலை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும், இச் சாதனையைக் கண்டு சகித்துக் கொள்ள முடியாத அதிகாரிகளும் அரசில்வாதிகளும் இறுதியாக பிரதம மந்திரியின் தலைமையில் 19.07.1993 இல் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது இந்நாடகத்திற்கான பரிசைக் கொடுக்க மறுத்து விட்டனர். அத்தோடு பரிசளிப்பு விழாவின் போது 'முதலாவது பரிசு பெறும் சமூக நாடகம் மேடையேற்றப்படும்' என நிகழ்ச்சி நிரலில் அசடித்திருந்த இடத்தில் அதற்கு மேலாக புராண நாடகம் என எழுதப்பட்ட அறிவிப்பை ஒட்டி ஒரு புராண நாடகத்தை மேடையேற்றி விட்டார்கள்!

இந்நாடகத்தை கொழும்பிற்கு அனுப்புவதைத் தடைசெய்ய அரசியல்வாதிகள் மேற்கொண்ட முயற்சியையும், இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் கல்வித் திணைக்கள அதிகாரிகளினதும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் நோக்கத்தோடு மத்திய மாகாண தமிழ்த்தின விழாவில் நடுவராக இருந்தவர்களுள் ஒருவரான ஒரு சர்வகலாசாலையின் முதுநிலை விரிவுரையாளர், கொழும்பில் நடுவராக செயற்பட தமக்கு விடுத்த அழைப்பை நிராகரித்துத் தனது சுயமரியாதையைப் பாதுகாத்துக் கொண்டுள்ளார். இவரை நாம் பேட்டி கண்ட போது, இந்த நாடகம் ஒரு திறமையான நாடகம் என்பதையும், அது கல்வித் திணைக்கள விதிமுறைகளுக்கமையவே தயாரிக்கப்பட்டுள்ள தென்பதையும், தமக்குக் கொடுக்கப்பட்ட விதிமுறைகளுக்கமையவே நடுவர் குழு அந்த நாடகத்தை முதலாவது இடத்திற்கு தெரிவு செய்தது எனவும், குறிப்பிட்டார். இப்படியான போட்டிகளில் அரசியல் வாதிகளே நடுவர்களாக இருந்து தமக்குத் தேவவையானவற்றைச் செய்து கொள்வது நல்லது என்றும் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

இந்நாடகத்திற்குரிய பரிசு வழங்கப் படுமோ அல்லது அவற்றை அரசியல் வாதிகளும், அதிகாரிகளும் தம்வசப்படுத்திக் கொள்வார்களோ என்பதை உறுதியாகக் கூற முடியாது. அதேபோல இப்பாடசாலையின் ஆசிரியர்களுக்குத் தண்டனையாக இடமாற்றம் கிடைக்குமோ இல்லையோ என்பதுவும் உறுதியாகக் கூற முடியாது. எனினும் ஒரு ஜனநாயக உரிமையை நிலை நாட்ட பொகவந்தலாவை சாந்தமரியாள் மகாவித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் மேற்கொண்ட நடவடிக்கைகள் மிகவும் பாராட்டப்பட வேண்டியதொன்று என்பதோடு, இது இக்கால கட்டத்தின் ஒரு சாதனையாகவும் மதிக்கப்பட வேண்டியதொன்றுமாகும்.

## தோட்ட லயன் அறைகளுக்குவாடகை?

**தோ**ட்டத் தொழிலாளர் வசித்து வரும் தோட்ட லயன்களுக்கு அவர்களிடமிருந்து வாடகை அறவிட உத்தேசித்துள்ளதாகத் தெரிய வருகிறது. புதிதாகத் தோட்டங்கள் தோறும் உருவாக்கப்படும் கூட்டுறவுச் சங்க கிளைகள் ஊடாக இதனை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், உத்தேச கூட்டுறவுச் சங்க தோட்டக் கிளையில் தோட்டத் துரையும், அப்பகுதிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், இல.தொழிலாளர் காங்கிரஸ், இல.தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் என்பவற்றின் தோட்டக் கமிட்டித் தலைவர்களும் மட்டுமே அங்கம் வகிப்பார்கள் எனவும், அவர்களே குறித்த தொழிலாளர்களுக்கு லயன் அறைகளை ஒதுக்குவது தொடர்பாக முடிவெடுப்பர் எனவும் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், தோட்டங்கள் தோறும் உருவாக்கப்படும் கூட்டுறவுச் சங்கக் கிளைகளின் நிர்வாகத்தின் கீழேயே லயன் அறைகள் யாவும் கொண்டு வரப்படவுள்ளதாகவும், இக் கூட்டுறவுச் சங்கத்தில் தோட்டத் தொழிலாளர் ஒவ்வொருவரும் அங்கத்துவம் வகித்ததாக வேண்டுமென்றும், அங்கத்துவப் பணமாக ஒவ்வொரு தொழிலாளியின் சம்பளத்திலிருந்தும் 250/- கழிக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒதுக்கப்படவுள்ளதாகவும், அப் பணத்தைக் கொண்டே ஆரம்ப நிர்வாகப் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

லயன் அறைகள் அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பிறகு தொழிலாளர்களுக்கு வங்கிக் கடன் வழங்கப்படும் எனவும் அவ் வங்கிக் கடன் பணத்தைக் கொண்டு கூட்டுறவுச் சங்கம் லயன் அறைகளைச் சீரமைக்கும் எனவும், இந்த வங்கிக் கடன் வட்டியுடன் தொழிலாளர்களின் சம்பளப் பணத்திலிருந்து மாதாந்தம் கழிக்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

கடன் தொகை முற்றாகக் கழிக்கப்பட்ட பிறகு, தோட்டத் தொழிலாளர்களுடன் கூட்டுறவுச் சங்கங்கள் நீண்டகால வீட்டுக் குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தங்களைச் செய்யும். அதன்படி பத்து அல்து இருபது வருடங்களுக்கு தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து மேற்படி ஒப்பந்தப்படி வாடகை கழிக்கப்படுமாம். குறித்த ஒப்பந்த காலத்தின் பின்புதான் தொழிலாளர்களுக்கு லயன் அறைகளைச் சொந்தமாக்குவது பற்றித் தீர்மானிக்கப்படுமாம்.

இதுவரை வாடகை எதுவுமே அறவிடப்படாத லயன் அறைகளை அவர்களது பணத்தைக் கொண்டே சீரமைத்து அவர்களுக்கே வாடகைக்கு விடத் தீர்மானித்திருக்கிறார்கள்.

தோட்டங்களை உருவாக்கிய தொழிலாளர்களுக்கு அவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் எட்டு அடி லயன் அறையை சொந்தமாக்க அவர்களது 'வாக்குகளில்' உயிர் வாழும் அரசிற்கு முடியவில்லை.

ஆனால் அங்குள்ள அரச நிலங்களை அந் நிலத்துடன் தொடர்பற்ற எத்தனையோ பெரும்பான்மையின மக்களுக்கு இலவசமாகப் பங்கிட்டுக் கொடுக்கின்றது. வீட்டுத் திட்டங்களின் கீழ் வீடுகளை இலவசமாகக் கட்டிக் கொடுக்கின்றது. வாடகை விற்பனை ஒப்பந்த அடிப்படையில் 'பிளட்' வீடுகளைக் கட்டிப் பகிர்தளிக்கின்றது.

மாகாணசபைத் தேர்தல் பிரச்சார மேடைகளில் இ.தொ.காவை ஏக பிரதிநிதியாக்குங்கள். மே 31ம் திகதிக்குள் தோட்டத் தொழிலாளர்களுக்கு லயன் அறைகள் சொந்தமாகும் என அமைச்சர் தொண்டமான் முழங்கினார்.

ஏகபிரதியானார்.

இப்போது, அவர்களுடைய லயன் அறைகளை, அவர்களுடைய பணத்திலே சீரமைத்து, அவர்களுக்கே வாடகைக்கு விடுதல் என்று, அவர்களுடைய தலையிலேயே மிளகாய் அரைக்க முயல்கிறது அந்த ஏக பிரதிநிதித்துவம்!

சரிநிகர் மாதமிருமுறை இதழ் இல. 18/2 அலோ சாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.
அச்சுப்பதிவு: 334, காலிவீதி இரத்மலானை நவமக அச்சகம்.